Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 144 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (10.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 17, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

**கமெண்ட் கந்தர்...**

அரசியலில நிரந்தர எதிரிகள் இல்லையெண்டு சொல்லுறத கேள்விப்பட்டிருக்கிறன்.. இப்பதான் நேரடியா பார்க்கிறன்...!



வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொடவை அந்த பதவியில் இருந்து நீக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விடுத்துவரும் கோரிக்கையை ஜனாதிபதி ரணில் இதுவரை நிறைவேற்றாத காரணத்தினால் கடுப்பில் இருக்கிறதாம் தாமரை மொட்டு.

இதனால் இப்போது இரு தரப்புக்கும் பனிப்போர் ஆரம்பித்துள்ளதாம்.




# தாமரை மொட்டு - யானை தேர்தலுக்காக கூட்டணி!

## ரணில் - பெசில் நீண்டநேரம் மந்திராலோசனை

## வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகளுடன் இணைவு

02 பக்கம்

## எட்டு நாட்களில் மின்பாவனை வீழ்ச்சி

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர்

(நா.தினுஷா )

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மதிப்பீட்டின்படி கடந்த எட்டு நாட்களில் மின்பாவனை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் முறையான நிதி முகாமைத்துவம் இன்மையினாலுமே நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

65 சதவீத மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின் பாவனையாளர்களின் சங்கம் மற்றும் மின்சக்தி பாதுகாப்புக்கான தேசிய குழு ஆகியன இணைந்து பெற்றுக் கொண்ட 69 இலட்சம் மக்களின் கையொப்பங்கள் அடங்கிய மனுவை அந்த சங்கங்களின் உறுப்பினர்கள் நேற்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரிடம் சமர்ப்பித்திருந்தனர். முறைப்பாட்டை ஏற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு...

02 பக்கம்

## கோரிக்கைகளை சஜித் தரப்பு நிராகரித்தால் தனித்துப் போட்டி

### ரிஷாட் புத்தளத்தில் அறிவிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது கட்சி முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரிக்குமாக இருந்தால் நாம் மயில் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவோமென...



02 பக்கம்

## சுதந்திரக் கட்சி அணி சந்திரிகாவுடன் பேச்சு

(நா.தினுஷா )

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் விதம், கூட்டணி, பொதுச் சின்னம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இரு முனைகளில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அணியினர் ஒரு புறம், சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்று அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் மறுபுறம் தேர்தலுக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதனடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் சுதந்திரக் கட்சியி லிருந்து விலகிச்சென்று அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும்...

02 பக்கம்

## மலையகக் கட்சிகளைப் புறக்கணித்தால் சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்போம்!

### மனோ கணேசன் எம்.பி தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)

“ தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக மலையகக் கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்தவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சர்வகட்சி மாநாட்டை தமிழ் முற்போக்கு கூட்டணி புறக்கணிக்கும்” - என்று கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.



அக்கரப்பத்தனை மற்றும் டயகம பிரதேசத்தின் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் செயற்பட்டாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று (08) தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் அக்கரப்பத்தனை லக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே...

02 பக்கம்

## கலவர பூமியானது பிரேஸில்:

### போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்ட நாடாளுமன்றம் - உயர்நீதிமன்ற கட்டடங்கள் சேதம்

10 பக்கம்

## தேர்தல் இடைநிறுத்தம்; மனுவை நிராகரியுங்கள்!

### உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை இடைநிறுத்துமாறு கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரிக்குமாறு இரு நகர்த்தல் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டகல மற்றும் சமூக செயற்பாட்டாளர் எரங்க குணசேகர ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெளிவற்ற வார்த்தைகள் திருத்தப்படும் வரை 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு சாத்தியமில்லை

### அமைச்சர் டக்ளஸின் எழுத்துமூல ஆவணத்தில் சுட்டிக்காட்டு

அரசியலமைப்பில் காணப்படுகின்ற தெளிவற்ற வார்த்தைப் பிரயோகங்களினால் உருவாகின்ற தடைகள் நீக்கப்படாவிட்டால், 13ஆவது திருத்தச் சட்டத்தை திறம்பட அமுல்படுத்துவது சாத்தியமில்லை என்பதே கடந்த 30 வருடங்களுக்கும் மேலான மாகாண சபை முறைமையின் அனுபவமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், மூன்று கட்டங்களாக 13ஆவது திருத்தச் சட்டத்தை பூரணமாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவில் அங்கம் வகிப்பதுடன், குறித்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்ற கலந்துரையாடல்களிலும் தொடர்ச்சியாக கலந்துகொண்டு வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,...



02 பக்கம்

## தமிழாராய்ச்சி படுகொலை நினைவு அனுஷ்டிப்பு இன்று

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 49ஆவது நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை நினைவாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை(10) காலை 10மணிக்கு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன்போது பொதுமக்களும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் எவ்வித பேதமுமின்றி கலந்துகொண்டு அஞ்சலி செலுத்த வேண்டுமென நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்தார்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

02 பக்கம்

## காட்டு யானைகளுக்கு வீதியில் இடையூறு செய்வோர் கைதாவர்!

### வனஜீவராசிகள் திணைக்களம் அறிவிப்பு

புத்தல - கதிர்காமம் வீதியில் காட்டு யானைகளுக்கு உணவளிப்போர் மற்றும் யானைகளுக்கு இடையூறு விளைவிப்போரை கைதுசெய்யவும் அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சந்தன சூர்ய பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புத்தல - கதிர்காமம் வீதியில் இடம்பெறும் காட்டு யானைகளின் தாக்குதலை தடுக்கவும், அவற்றை விரட்டுவதற்கும் நடமாடும் வாகன சேவையை முன்னெடுக்க வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய யால கல்கே தள வன அலுவலக...

02 பக்கம்

## கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு பொறுப்புடன் நடக்கவில்லை!

### அரசாங்க நிதி பற்றிய குழு அதிருப்தி

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரிகள், குழு முன்னிலையில் ஆஜராகாமை மற்றும் அது தொடர்பில் உரிய முறையில் அறிவிக்காமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக அதிருப்தி வெளியிடப்பட்டது.




கடந்த டிசம்பர் 21ஆம் திகதி அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் ஆணைக்குழு அழைக்கப்பட்டிருந்த போதும்,...

02 பக்கம்

## எதிர்வரும் தேர்தலில் ஈரோஸ் தனித்து களமிறங்கத் தீர்மானம்

### அதன் செயலாளர் நாயகம் பிரபாகரன் அறிவிப்பு

(கனகராசா சரவணன்)

மக்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்படுகின்றது. அந்த மாற்றத்தை நோக்கியே ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துவமாக களமிறங்குமென ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் பிரபாகரன் தெரிவித்தார்.




02 பக்கம்




**மின்கட்டண அதிகரிப்பைக் கண்டித்தும், அரசியல் தலைவர்கள் தங்களது மின் பாவனை கட்டணங்களை முதலில் செலுத்துமாறு வலியுறுத்தியும் இலங்கை மின்சார சபை முன்றலில் நேற்று (9) பிற்பகல் பொதுமக்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.**

## எட்டு நாட்களில்...

கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை சட்டத்துக்குப் புறம்பானது என்றே அநேகமானவர்கள் குறிப்பிடுகிறார்கள். சரியான தரவுகளைக்கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்படவில்லை. கடந்த 08 நாட்கள் பயன்பாடு பெருமளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

மின்சாரத்துக்கான கேள்வியும் குறைவடைந்துள்ளது. அதுமாத்திரமல்லாமல் நாளாந்தம் இரண்டு மணிநேர மின்துண்டிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது. மின்சாரம் தொடர்பான சகல விடயங்களிலும் அரசு 100 பில்லியனுக்கும் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்கிறது. மின்சார விநியோகத்துக்காகவும் பெருமளவு பணத்தை மக்கள் அரசுக்கு விநியோகிக்கிறார்கள்.

இதற்கும் மேலதிகமாக எங்களின் கணக்கெடுப்பின் அடிப்படையில், மின்சார சபைக்கு 30 பில்லியன் ரூபா வரையில் தனியான வட்டி செலுத்தப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக எரிபொருள் உள்ளிட்ட பொருட்களின் கொள்வனவு மற்றும் செலுத்தவேண்டிய பணத்தை செலுத்தாமை போன்றவற்றால் ரூ.10 பில்லியன் மிகுதியாகிறது. எனவே, மின்சார சபைக்கு கடந்த சில வருடங்களாக நட்டம் ஏற்பட்டுள்ளது என்று யாராவது கூறுகிறார்கள் என்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்குக் காரணம், பெருமளவு நிதி மின்சார சபையிலிருந்து வெளியேறுகிறது. 2021ஆம் ஆண்டு ரூ. 21 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அனல் மின்நிலையம் செயலிழந்தமையால், அந்த மாதத்தில் மாத்திரம் ரூ. 16 பில்லியன் நட்டம் ஏற்பட்டது.

அந்த வருடத்துக்கான 25 பில்லியன் வரி, நிலக்கரியினால் ஏற்பட்ட 16 பில்லியன் நட்டம் என்பவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது மின்சார சபை அதனால் நட்டமடைவதில்லை. நிதியை முறையாக முகாமைத்துவம் செய்யாமையின் காரணமாகவே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வரிப்பணம், மின் கட்டண அதிகரிப்பால் மின்பாவனையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, மின் துண்டிப்பு போன்ற விடயங்களை கணக்கெடுத்தால் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான அவசியம் இல்லை - என்றார்.

## சுதந்திரக் கட்சி அணி...

குழுவினருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (08) சந்திரிகா குமாரதுங்கவின் இல்லத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 124ஆவது ஜனன தின நிகழ்வின் பின்னர் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதுடன், இதில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவன்ன, ஜகத் புஷ்பகுமார, நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புதிய சின்னத்தில், புதிய கூட்டணியில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

சுதந்திரக் கட்சி மேலும் சில கட்சிகளுடன் இணைந்து ‘சுதந்திர மக்கள் கூட்டணி’ என்ற பெயரில் ‘விளக்கு’ சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஷான் விஜயலால் த சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்பட்டுவரும் டலஸ் அழகப்பெருமவின் தலைமையிலான ‘சுதந்திர மக்கள் சபை’, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு எல உருமய, விஜய தரணி ஜாதிக சபை உள்ளிட்ட கட்சிகளைக் கொண்ட விமல் வீரவங்சவின் தலைமையிலான ‘உத்தர லங்கா சபா’, தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் உள்ளிட்ட மேலும் சில தரப்பினருடன் இணைந்து சுதந்திர மக்கள் கூட்டணி என்ற பெயரில் போட்டியிடவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ‘கை’ சின்னத்தில் போட்டியிடவும் சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், உத்தேச கூட்டணியின் செயலாளராக தமது கட்சியிலிருந்து ஒருவரை தெரிவுசெய்ய வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய குழுவினர் அதற்கு ஆதரவளிக்காமையால் சுதந்திர மக்கள் சபை மற்றும் உத்தர லங்கா சபா ஆகிவற்றுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

## தமிழாராய்ச்சி...

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது. இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். தமிழர்கள் மனதில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது.

## காட்டு யானைகளுக்கு...

அதிகாரிகள், கடந்த நான்கு நாட்களாக அதிகாலை 5 மணிமுதல் நள்ளிரவு வரை, புத்தல - கதிர்காமம் வீதியில் சுற்றித்திரியும் காட்டு யானைகளை வனப்பகுதிக்கு விரட்டி, வாகன விபத்துகளைத் தடுப்பதற்கு நடமாடும் வாகனப் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டிருந்ததாக அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவைக்கேற்ப மேற்படி வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க வனஜீவராசிகள் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூர்யபண்டார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி வீதியூடாக பயணிக்கும் சிலர் காட்டுயானைகளுக்கு உணவளிப்பதன் காரணமாக அதற்கு பழக்கப்பட்ட யானைகள் குறித்த வீதியில் நிற்பதுடன், அவ்வழியினூடாக பயணிக்கும் சாரதிகள் மற்றும் பயணிகள், காட்டு யானைகளுக்கு இடையூறு விளைவிப்பதால் யானைகளால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

இதனால் புத்தல - கதிர்காமம் வீதியில் மட்டுமன்றி உடவளவை, ஹபரனை உள்ளிட்ட பிரதேசங்களில் காட்டு யானைகளுக்கு உணவளிப்போர் மற்றும் யானைகளுக்கு இடையூறு விளைவிப்போரை கைதுசெய்யவும் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவும நடவடிக்கை எடுக்க வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## மலையகக் கட்சிகளை...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“தமிழக அரசின் அழைப்பையேற்று, மலையக மக்கள் சார்பில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவராக நாளை (09.01.2023) சென்னை செல்கின்றேன். தமிழக வம்சாவளித் தமிழர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே செல்கின்றேன். இதன்போது எமது மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை, துயரங்களை, கஷ்டங்களையெல்லாம் தமிழக முதல்வரிடம் எடுத்துக்கூறவுள்ளேன். மக்களுக்கான தேவைப்பாடுகள் சம்பந்தமாகவும் விளக்கமளிக்கவுள்ளேன்.

வடக்கு, கிழக்கில் வாழ்பவர்கள்தான் தமிழர்கள், அவர்களுக்கு மட்டுமே பிரச்சினை உள்ளது என்றே இதுவரைகாலமும் நினைத்துக்கொண்டிருந்தனர். வடக்கு, கிழக்கு பற்றி பேசுவது தப்பில்லை. ஆனால், மலையகத்தை மறந்துவிட்டனர். இந்நிலைமை தற்போது மாறியுள்ளது. மலையகத் தமிழர்களும் சுயமரியாதையுள்ள ஓர் இனம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நானும், திகாம்பரமும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினோம். அரசில் இணையுமாறு அழைப்பு விடுத்தார். மறுத்துவிட்டோம். பதவிகள் எல்லாம் எங்களைத் தேடிவரும் எனக் கூறினோம். நாட்டின் ஜனாதிபதி நீங்கள், எங்கள் மக்கள்மீது அக்கறைகொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்தோம்.

வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துகின்றீர்கள். தேசிய இனப்பிரச்சினையானது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானது அல்ல. எங்களிடமும் பேசுங்கள் என்றோம். எமது மக்களுக்கும் அரசியல், சமூக மற்றும் கலாசார அபிலாஷைகள் உள்ளன. தேவைப்பாடுகள் உள்ளன. எனவே, எங்கள் பிரச்சினை பற்றியும் கண் திறந்து பாருங்கள், காது கொடுத்துக் கேளுங்கள் எனவும் குறிப்பிட்டோம்.

மலையகக் கட்சிகளை அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்தாவிட்டால், சர்வகட்சி கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கேற்காது. எங்களை மதித்தால்தான் நாமும் மதிப்போம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வந்தால் போட்டியிடுவோம். நாம் தேர்தலுக்குத் தயார்” - என்றார்.

# பிரேஸில் வன்முறைகளுக்கு ஜனாதிபதி ரணில் கண்டனம்

பிரேஸில் தலைநகர் பிரேஸிலியாவில் இடம்பெற்றுவரும் அண்மைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தாம் மிகுந்த கவலையடைவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

''அரசியலமைப்புக்கு முரணான வழிமுறைகள் மூலம் ஜனநாயகக் கட்டமைப்புகளைத் தூக்கி எறிவதற்கான குழுக்களின் இதேபோன்ற முயற்சிகளை இலங்கையும் வெகுகாலத்திற்கு முன்பு அனுபவித்தது.

இத்தகைய விரோதங்கள் கண்டிக்கப்படுகின்றஸிசில் ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் மக்களுடன் நாங்கள் ஒன்றித்து நிற்கிறோம்.

ஜனநாயகம் மற்றும் அதன் நிறுவனங்கள் என்பன அனைத்து குடிமக்களால் உலகளவில் மதிக்கப்படுவது கட்டாயமாகும்'' - என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தாமரை மொட்டு...

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இடம்பெறுமாக இருந்தால், பொதுவான கொள்கைத்திட்டங்களின் அடிப்படையில் செயற்பட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தீர்மானித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

அதற்கமைய, குறிப்பாக ஒருசில உள்ளூராட்சி மன்றங்களில் ‘மொட்டு’ சின்னத்திலும் மேலும் சில உள்ளூராட்சி மன்றங்களில் ‘யானை’ சின்னத்திலும் இன்னும் சில உள்ளூராட்சி மன்றங்களில் பொது சின்னத்திலும் போட்டியிட இரு கட்சிகளும் இணங்கியுள்ளன.

இதேவேளை, வேட்புமனு தாக்கல் செய்வது தொடர்பில் எந்தெந்த மாவட்டங்களில் கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்று (10) கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வரவும் இரு கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

அதேபோன்று, வடமாகாணத்தின் ஒருசில உள்ளூராட்சி மன்றங்களில் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ‘வீணை’ சின்னத்திலும் கிழக்கு மாகாணத்திலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்களில் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ‘படகு’ சின்னத்திலும் போட்டியிட பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர்கள் யோசனை முன்வைத்திருப்பதாக தெரிகிறது.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்துள்ள அமைச்சர்களுடன் கலந்துரையாடி, பதுளை போன்ற பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடவும் அதன்போது செயற்படும் விதம் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளவும் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அந்தக் கட்சியின் பெசில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம், ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வஜிர அபேவர்தன, சாகல ரத்நாயக்க, ரங்கே பண்டார, அகில விராஜ் காரியவசம், ரவி கருணாநாயக்க மற்றும் ருவன் விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## கொழும்புத் துறைமுக...

அதன் உயர் அதிகாரிகள் ஏன் கலந்துகொள்ளவில்லை என்பதற்கு விளக்கமளித்து எழுத்துமூல சமர்ப்பணமொன்றை மேற்கொள்ளுமாறு அரசாங்க நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தது.

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் அண்மையில் (05) கூடியபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் முதலீடுகளை உருவாக்கும் நோக்கத்துக்காக கொண்டுவரப்பட்டது என்பதை வலியுறுத்திய குழு, இதுவரை மேற்கொண்டுள்ள பணிகளின் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்ததுடன், முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அதிக பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டியது அவசியம் என்றும் ஆலோசனை வழங்கியது.

பதிவுகள் மற்றும் சமர்ப்பிப்புகள் யாவும் ஒன்லைன் முறையின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணைக்குழு எதிர்பார்க்கும் நிலையில், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கு ஏன் முறையான ஒன்லைன் முறைமை அல்லது இணையத்தளம் ஒன்று கொண்டிருக்கவில்லையென்றும் குழு கேள்வியெழுப்பியது.

இந்த விடயத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு, ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தது.

அத்துடன், அறிக்கைகள் சமர்ப்பிப்பதில் காணப்படும் காலதாமதம் குறித்தும் குழு கேள்வியெழுப்பியது. வருடாந்த கணக்காய்வு அறிக்கையை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் அரசாங்க நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்குப் பணித்தது.

அதேநேரம், கசினோவை ஒழுங்குமுறைப்படுத்தல் குறித்த விடயத்தைக் கண்காணிப்பதற்கு அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் சந்திம வீரக்கொடி, எம்.ஏ.சுமந்திரன், மயந்த திசாநாயக்க மற்றும் (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார ஆகியோரைக் கொண்ட உபகுழுவை நியமிப்பதாகவும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அறிவித்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் நளின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னக்கோன், அனுப பஸ்குவல், (கலாநிதி) சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, மயந்த திசாநாயக்க, பிரேம்நாத் சி. தொலவத்த, மதுர விதானகே, (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார, சுமித் உடுகும்புர ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கோரிக்கைகளை சஜித்...

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள புத்தளம், சிலாபம் நகர சபைகள், புத்தளம், கற்பிட்டி, வன்னாத்தவில்லு, ஆராச்சிக்கட்டுவ உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவது தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (08) இரவு புத்தளத்தில் இடம்பெற்றது.

இதன்பின்னர் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சில மாவட்டங்களில் தனித்தும், ஐக்கிய மக்கள் சக்தியோடு சில மாவட்டங்களில் இணைந்தும் போட்டியிடுவதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த பேச்சுவார்த்தையின்போது நாம் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறோம். எனவே, எமது கோரிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளுமாக இருந்தால் அவர்களோடு இணைந்து போட்டியிடுவோம்.

நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை அவர்கள் நிராகரித்தால், நாடளாவிய ரீதியில் தனித்துப் போட்டியிடுவதற்கும் எமது கட்சி தயாராகவே இருக்கிறது.

இது ஒரு ஜனநாயக நாடாக இருப்பதால் தேர்தல் நடத்தப்பட வேண்டிய காலத்தில் தேர்தலை ஜனநாயக முறையில் நடத்த வேண்டிய பொறுப்பு ஆளும் அரசாங்கத்திற்கு உள்ளது.

தற்போதுள்ள அரசாங்கம் இந்த நாட்டை ஒரு வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இந்த அரசாங்கத்தை பொறுப்புக் கொடுத்தபோது கூலித் தொழிலாளி முதல் சாதாரண குடிமகன்வரை வாழ்வதற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன.

ஆனால், இன்று அந்த நிலைமை மாறி அரிசி, சீனி மற்றும் பருப்பு என எல்லாப் பொருட்களும் மூன்று, நான்கு மடங்குகளாக அதன் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதை காணமுடிகின்றது.

எரிபொருள் விலை அதிகரிப்பு, நீர்க்கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணம் என்று விலையேற்றங்களை தாக்குப்பிடிக்காமல் மக்கள் அவதிப்படும் போது, மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்பது மக்களுக்கு செய்கின்ற பாரிய துரோகமாகும். நாட்டில் வாழும் மக்கள் பல துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வருகிறார்கள். எனவே, இந்த விலையேற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

இந்த அரசாங்கத்தின்மீது சர்வதேச நாடுகளும், மக்களும் நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள். இவ்வேளையில், ஜனநாயாக ரீதியில் நடத்தப்படும் தேர்தல் மூலம் மக்கள் தாங்கள் விரும்புகின்ற அரசியல் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதால் எமது நாடு தொடர்பில் சர்வதேச ரீதியில் நம்பிக்கை ஏற்படும்.

இன்று எமது நாடும், நாட்டு மக்களும் பொருளாதார ரீதியாக பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் சர்வதேச ரீதியாக இழந்திருக்கும் நம்பிக்கை இதன்மூலம் மீண்டும் கட்டியெழுப்பப்படும்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் எமது நாட்டை மீட்பதற்கு இது ஒரு காரணியாக அமையும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒரு சிறிய தேர்தலாக இருந்தாலும், எமது நாட்டு மக்கள் யாரை விரும்புகிறார்கள், எந்தக் கட்சியை விரும்புகிறார்கள் என்பது தொடர்பிலான செய்தியை சர்வதேச நாடுகளுக்கு இதன்மூலம் சொல்ல முடியுமென நம்புகிறேன் - என்றார்.

## எதிர்வரும் தேர்தலில்...

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள உல்லாச விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் (08) ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலாகாலமாக எமது தமிழ் மக்கள் நம்பி நம்பி ஏமாந்தவர்களே ஒழிய எதையும் பெற்றுக்கொண்டதோ, சாதித்ததோ சரித்திரம் இல்லை. தற்போது தேர்தல் என்ற ஒரு மாயை உருவாகியுள்ளது. அதற்குள் அனைவரும் உள்வாங்க வேண்டியது காலத்தில் கட்டாயம். அதனுள் ஈரோஸ் எவ்வாறு பங்களிப்புச் செய்யப்போகின்றது என்பது தொடர்பில் ஆராய்ந்துள்ளோம்.

கடந்த சில வருடங்களாக சில வெளிநாட்டு சக்திகளின் செயற்பாடுகள் காரணமாக எமது ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சி இடைநிறுத்தப்பட்டிருந்தது. கடந்த டிசம்பர் 23ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின் அடிப்படையில் மீண்டும் ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகமாக நான் தெரிவுசெய்யப்பட்டு, எமது கட்சி தொடர்ந்து செயற்பட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, எமது கட்சியினூடாக எமது மக்களுக்கான காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலில் கலந்துகொள்வதா இல்லையா என்ற கலந்துரையாடலை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து இடங்களிலும் மேற்கொண்டு வருகின்றோம்.

கணிசமான உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தல்களை எதிர்கொள்வதாகவும், சில பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகளை சில அரசியற் கட்சிகளுக்கு விட்டுக் கொடுப்பதாகவும் எமது கூட்டங்களில் முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

இது ஒரு ஜனநாயக நாடு, நாங்கள் ஒரு ஜனநாயகக் கட்சி என்று சொல்லிக்கொண்டு தனி ஒருவர் கையில் அதிகாரம் இருக்கக்கூடாது என்ற கொள்கையுடையதே ஈரோஸ் கட்சி. அந்த அடிப்படையில்தான் இன்றைய தினம் வடக்கு, கிழக்கு மாகணங்களைச் சேர்ந்த தோழர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது.

மக்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்படுகின்றது. அந்த மாற்றத்தை நோக்கியே மக்கள் நகர்ந்துகொண்டிருக்கின்றார்கள். இந்த மாற்றத்தைக் கொடுக்கவேண்டிய கடப்பாடு ஈரோஸுக்கு இருக்கின்றது. அந்த மாற்றத்தை உருவாக்க வேண்டும். மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கங்களுக்காக வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணி தனித்துவமாகக் களமிறங்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றது என்று தெரிவித்தார்.

## தெளிவற்ற வார்த்தைகள்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள எழுத்துமூல ஆவணத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அதாவது, ஜனாதிபதிக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாகவும் நிர்வாக ஏற்பாடுகளுக்கு ஊடாகவும் மத்திய அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் மாகாண அரசாங்கங்களிடம் கையளிப்பது முதலாவது கட்டம்.

அதேபோன்று, 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட சட்டங்களுள், 13ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்துவதற்கு இடையூறாக இருக்கின்ற அல்லது முரண்பாட்டினை தோற்றுவிக்கும் வகையிலான சட்டங்களை ஆராய்ந்து, அவை 13ஆவது திருத்தச் சட்டத்துடன் பொருந்தும் வகையில் சட்டத்திருத்தங்களை மேற்கொள்தல் இரண்டாவது கட்டம்.

மூன்றாவது கட்டமாக, 13ஆவது திருத்தத்தின் சில விதிகளில் உள்ள தெளிவின்மையை நீக்குவதற்கும், தெளிவான முறையில் அதிகாரங்களை வரையறை செய்வதற்கும் மற்றும் ஒதுக்கீடு செய்வதற்கும், அத்தோடு சட்டமியற்றுதல், நிர்வாக, நீதித்துறை மற்றும் நிதி அதிகாரங்களை அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்கள் மூலம் பயன்படுத்துவதற்கான வரையறைகளை உருவாக்குவதற்கு தேவையான அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும்.

மேலும், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்க முடியும் என்பதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) மீண்டும் மீண்டும் கூறி வருகிறது. இந்த நிலைப்பாட்டில் நாங்கள் நீண்ட காலமாக நிலையாக இருந்து வருகிறோம்.

சில அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக, 13ஆவது திருத்தம் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை என்று கூறினாலும், 1988ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு முதன்முறையாக நடைபெற்ற தேர்தல்களைத் தவிர, கிழக்கு மாகாணத்தில் இரண்டு தடவைகளும் வடமாகாணத்தில் ஒரு முறையும் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் கலந்துகொண்டதுடன், மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

இது மாகாண சபை அமைப்பை ஏற்றுக்கொள்ளும் அனைவரினதும் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது. மற்ற மாகாணங்களிலும் மக்கள் இப்போது இந்த முறைக்கு பழகிவிட்டனர், அதைத் தொடர்வதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை.

13ஆவது திருத்தத்தின் ஊடான அதிகாரப்பகிர்வை சரியான முறையில் வரையறைப்படுத்தி அர்த்தமுள்ள முறையில் செயல்படுத்துவது ஒரு ஐக்கிய நாட்டிற்குள் பன்முகத்தன்மையையும் மற்றும் பன்மைத்தன்மையைக் கையாள்வதற்கான வழிமுறையையும் வலுப்படுத்தும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# கணக்காய்வாளர் நாயகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் கருத்துத் தொடர்பில் கோப் குழு கடும் அதிருப்தி


**அமைச்சின் செயலாளரை குழு முன்னிலையில் மீண்டும் அழைக்கத் தீர்மானம்**

**★ சபாநாயகரிடம் முறைப்பாடு**

**★ ஜனாதிபதிக்கு அறிவிக்க முடிவு**

**★ நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை**







அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோபா குழு) விசேட கூட்டம் அதன் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அண்மையில் (05) நடைபெற்றது. இதில் கீழ்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

1. கோப் குழுவின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது மற்றும் குழுவின் வேலைகளில் அதன் உறுப்பினர்களை தீவிரமாக ஈடுபடுத்துவது என்ற எதிர்பார்ப்புடன் நான்கு உபகுழுக்களுக்கு 12 உறுப்பினர்கள் நியமனம்.

2. 2023ஆம் ஆண்டில் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்படவேண்டிய மற்றும் தற்பொழுது அழைக்கப்பட்டு பின்தொடர்புகளை மேற்கொள்ளவேண்டிய நிறுவனங்கள் யாவை என்பது பற்றி தீர்மானிக்கப்பட்டது. இதற்காக கணக்காய்வாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் செயற்பட கோப் குழு இணக்கம் தெரிவித்துள்ளது. தேவைப்பட்டால் அந்த நிறுவனங்களுக்கு களப்பயணம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

3. பிரதமர் தலைமையில் 2022 டிசம்பர் 22ஆம் திகதி நடைபெற்ற "தேசிய உற்பத்தித்திறன் விருது" உத்தியோகபூர்வ நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் கணக்காய்வாளர் நாயகத்தின் செயற்பாடுகள் மற்றும் கோப் குழுவின் அதிகாரம் சவாலுக்குட்படுத்தப்படும் வகையில் தெரிவிக்கப்பட்ட கருத்து பற்றி கலந்துரையாடல்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் கணக்காய்வாளர் நாயகத்தின் மற்றும் கோப் குழுவின் அதிகாரங்களை சவாலுக்கு உட்படுத்தப்படும் வகையில் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் கோப் குழுவுக்கு கடிதம் மூலம் அறியப்படுத்தியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சரவை அமைச்சர் என்ற ரீதியில் அவர் மேற்குறிப்பிட்ட கருத்தைத் தெரிவித்திருந்தபோதிலும், அவர் குறிப்பிட்டதைபோன்று நாடாளுமன்றத்தின் நிதி முகாமைத்துவத்தைப் பலப்படுத்த நாடாளுமன்ற முறைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு தொடர்பில் நிலையியற் கட்டளைக்கமைய தமக்கு வழங்கப்பட்ட அதிகாரம் மீறப்படவோ அல்லது அவ்வாறு செயற்பட எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கவில்லையென்றும் கணக்காய்வாளர் நாயகத்தினால் குழுவுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கணக்காய்வாளர் நாயகத்துக்கு அரசியலமைப்பு மற்றும் எழுதப்பட்ட சட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளை நடைமுறைப்படுத்தும்போது செயற்பட வேண்டிய முறைமை தொடர்பில் அரச துறையினர், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும் வகையில் முன்வைக்கப்படும் கருத்துகள் நாடாளுமன்றத்தின் நிதி நிர்வாகம் தொடர்பான எதிர்பார்ப்புகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பது கண்காணிக்கப்பட்டிருப்பதாகவும் கணக்காய்வாளர் நாயகத்தால் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக, இவ்விடயம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் பின்வரும் முன்மொழிவுகளும் தீர்மானங்களும் குழுவால் முன்வைக்கப்பட்டன.

1.தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சரின் கருத்து பிழையான முன்னுதாரணமாக அமைந்திருப்பதுடன், கோப் குழுவை குறைத்து மதிப்பிடும் வகையில் அமைந்திருப்பதால் இது தொடர்பில் குழு கடும் அதிருப்தியை வெளியிட்டது. இது குறித்து கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அவருடைய பணியாட்தொகுதியிடம் குழுவின் கவலையைத் தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

2. இந்தக் கருத்துத் தொடர்பில் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்தல்.

3. இந்தக் கருத்தின் ஊடாக சட்டவாக்க செயற்பாடுகளில் நிறைவேற்று அதிகாரம் தலையீடு செய்வது தொடர்பில் எதிர்ப்பை வெளியிட்டு ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் அறியப்படுத்தல்.

4. இதன் நகலை பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கு அனுப்புதல்.

5. கடந்த கோப் குழுக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் குறித்து இரண்டு நாட்களுக்குள் தெரிவிக்குமாறும், எதிர்வரும் 17ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் ஆஜராகுமாறும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தல் மற்றும் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் செயலாளரை மீண்டும் வலியுறுத்தல்.

6. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பில் கடந்த கோப் குழுவில் கலந்துரையாடப் பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்ட விசேட அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

7. அத்துடன், தற்பொழுது நிலவும் பொருளாதார சூழ்நிலைக்கு மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களை அழைப்பது தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டதுடன், குறிப்பாக நிதி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான ஜகத் புஷ்பகுமார, ஜானக வக்கும்புர, லொஹான் ரத்வத்த, சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, நளின் பண்டார, முஜிபுர் ரஹ்மான், ஜகத் குமார சுமித்திராராச்சி, (மேஜர்) சுதர்ஷன தெனிபிட்டிய, சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, சாணக்கியன் இராசமாணிக்கம், ராஜிகா விக்ரமசிங்ஹ, சட்டத்தரணி மதுர விதானகே மற்றும் (கலாநிதி) சரித ஹேரத் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**10-01-2023 சுபகிருது வருடம் மார்கழி மாதம் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்துவைப்பர், செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்:** வீட்டு, தொழிலிட உபகரணங்கள் உங்கள் கையால் பழுதடையும், எதிர்பாராத விபத்து.

**மிதுனம்:** இளைய சகோதரர் உங்களுக்கு உதவுவார், தாய்வழி நன்மைகள் உண்டு.

**கடகம்:** வாய்ப்பேச்சால் தொல்லைகளை சந்திப்பீர்கள், யாருடனும் விவாதிக் காதீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சுப காரியங்கள் நடைபெறும், கணவன் - மனைவி உறவு மேம்படும்.

**கன்னி:** தேவையற்ற பயணங்களால் தொல்லைகளையும் செலவுகளும் ஏற்படும்.

**துலாம்:** காதலில் வெற்றி கிட்டும், அனைத்துவித இலாபங்களும் வெற்றியும் கிட்டும்.

**விருச்சகம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் அக்கறையுடன் செயல்பட வேண்டும், வாகன நட்டம்.

**தனுசு:** சகோதரர்களால் கவலை, சொத்து பிரச்சினையால் வீண் சண்டைகள், மனச்சங்கடங்கள்.

**மகரம்:** யாருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம், வீண் பயணங்களால் தொல்லைகள்.

**கும்பம்:** உங்கள் விவாகம் தொடர்பாக முக்கிய தீர்மானமொன்றை எடுப்பீர்கள். வாகன சுகம்.

**மீனம்:** நோய், கடன் நிவாரணம், தற்காலிக தொழில் - வியாபாரத்தால் நல்ல இலாபம்.

| | |
|---|---|
| திதி: | திருதியை பி.ப. 12.10 வரை பின் சதுர்த்தி (தேய்பிறை) |
| நட்சத்திரம்: | ஆயிலியம் மு.ப. 9.01 வரை பின்மகம் |
| யோகம்: | சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை: | மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம்: | மு.ப. 8.32 – 9.28 மணி வரை |
| ராகு காலம்: | 3.31 – 5.01 மணி வரை |
| எமகண்டம்: | 9.31 – 11.01 மணி வரை |
| குளிகை : | 12.31 – 2.01 மணி வரை |
| சந்திராஷ்டமம்: | தனுசு – மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| விசேட தினம்: | சங்கடஹர சதுர்த்தி |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட தலைவர் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கட்டுப்பணத்தை நேற்று (09) செலுத்தினார். இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம், ஊடகப் பிரதி அமைச்சர் சாந்த பண்டார, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள திஸாநாயக்க, சமன்பிரியா ஹேரத், சுமித் உடுகும்புர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் நடவடிக்கைக்காக குழு நியமனம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்ட தீர்மானத்திற்கு அமைய மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் நடவடிக்கைக்காக குழு நியமனம் நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இதுகுறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் வட்டாரக் கிளைகள் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தபோதிலும் பிரதேச கிளைகள், தொகுதிக் கிளைகள் புனரமைப்பு செய்யப்படவில்லை. அதனால் மாவட்ட கிளையும் அமைக்கப்படவில்லை.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களை தெரிவுசெய்யும் வகையில் வட்டாரக் கிளைகள் விரைவாகக்கூடி வேட்பாளரை தெரிவுசெய்வதுடன், வேட்பாளர் தெரிவின்போது பட்டியல் வேட்பாளர் தெரிவு சம்பந்தமாகவும் கவனம் செலுத்தவும், அத்தோடு வேட்பாளர் தெரிவின்போது இளைஞர், மகளிர் உள்வாங்கும் வகையில் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும். வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தை வட்டாரக் கிளைத் தலைவர், செயலாளர், பொருளாளர் சிபாரிசு செய்து தேர்தல் நடவடிக்கை குழுவிற்கு கையளிக்க தயாராகுமாறு கேட்டுக்கொள்வதுடன், மாவட்ட தேர்தல் நடவடிக்கைக் குழு கூடி கலந்துரையாடிய பின்னர் மேலதிக விபரங்கள் அறியத்தரப்படும் என்பதனையும் அறியத்தருகிறேன்.

மாவட்ட தேர்தல் நடவடிக்கைக் குழு, கி.துரைராசசிங்கம் (மு.நா.உ.), பா.அரியநேத்திரன் (மு.நா.உ.), சீ.யோகேஸ்வரன் (மு.நா.உ.), ஞா.ஸ்ரீநேசன் (மு.நா.உ.), இரா.சாணக்கியன் (நா.உ.), மா.நடராஜா (மு.மா.ச.), தி.சரவணபவன் (முதல்வர்), கி.சேயோன் (தலைவர் வா.மு.), க. றஞ்சினி (உப தவிசாளர்), க.குருநாதன் (மு.கா.ஆ.), லோ.தீபாகரன் (தலைவர் வா.மு. (மட்.), க.சசீந்திரன் (செயலாளர் வா.மு.), ம.நிலக்சன் (பொருளாளர் வா.மு.) ஆகியோரே இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஒலுவில் துறைமுகத்தை செயற்படுத்துவது உட்பட அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. கடற்றொழில் அமைச்சிற்கு நேற்று (09) வருகை தந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் இது தொடர்பாக கலந்துரையாடினர்.

# வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஊழியர்கள் போராட்டம்







வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (09) காலை 10.30 மணியளவில் வைத்தியசாலை நுழைவாயில் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முறையற்ற நியமனத்தினை வழங்குவதை நிறுத்து, வாழ்வாதாரத்தை அதிகரி, வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தைக் குறை, ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்திசெய் போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் பேரணியாக வைத்தியசாலை நுழைவாயிலிருந்து சென்று மணிக்கூட்டு சந்தியூடாக சென்று மீண்டும் வைத்தியசாலை நுழைவாயிலை வந்தடைந்திருந்தனர்.


## வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.

eba jb . ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687
h t hh

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜனவரி 10ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஜனநாயகத்தை நிலைநிறுத்த தேர்தல் திட்டமிட்டபடி தேவை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்குள் எவ்விதப் பிளவுகளும் இல்லை. சில அரசியல் வட்டாரங்களில் அப்படித் தெரிவிக்கப்படுவதைப் போன்று எதுவும் இல்லை.

இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்திருக்கின்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆணைக்குழுவுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன எனவும், இது தொடர்பில் ஆலோசனைகளைப் பெறுவதற்கு சட்டமா அதிபரை நாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம் குறித்து கேட்கப்பட்டபோதே ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மேற்படி மறுத்துரைப்பை வெளியிட்டார்.

அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுவதைப்போன்று தேர்தல் ஆணைக்குழுவுக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. எடுக்கப்படும் சகல தீர்மானங்களும் உறுப்பினர்கள் ஐவரினதும் இணக்கப்பாட்டுக்கமையவே முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் ஐவரும் இணைந்தே முன்னெடுத்து வருகின்றோம். அதற்கமையவே வேட்புமனு தாக்கலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. ஐவரும் அதில் கையெழுத்திட்டுள்ளோம். வர்த்தமானியில் கையெழுத்திட்டதன் பின்னர் அதனை மீளப் பெறுவதாக எவரும் கூறப்போவதில்லை. அவ்வாறு கூறவும் முடியாது என்று கூறியுள்ளார் அவர்.

தேர்தல் ஆணையத்தின் ஐந்து ஆணையாளர்களுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது என்ற தகவலை நாட்டின் தலைவரான ஜனாதிபதியே வெளியிட்டார் எனக் கூறப்படுகின்றது.

அப்படித் தேர்தல் ஆணையாளர்களிடம் தாமே நேரில் கூறினார் என்ற தகவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஊடகப் பிரதானிகள் சிலரை சந்தித்தபோது குறிப்பிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டு அது முன்னெடுக்கப்படும் சமயத்தில், இப்படி ஜனாதிபதியைச் சந்திப்பதற்கும் விளக்கம் கூறுவதற்கும் தேர்தல் ஆணையம் சென்றமை தவறான நடவடிக்கை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேரடியாகக் குற்றஞ்சுமத்தியிருக்கின்றது.

அப்படிச் சந்திக்கச் சென்றமையால்தான் இப்படி விபரீதமான விமர்சனங்களை தேர்தல் ஆணையம் எதிர்கொள்ளவேண்டி வந்திருக்கின்றது என்பது உண்மை.

இதற்கிடையில் தேர்தல் ஒத்திவைப்பு குறித்து வெளிவரும் செய்திகள் தொடர்பில் 7 தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுக் கூறியுள்ள விடயங்கள் இங்கு கவனிக்கப்படவேண்டியது முக்கியம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மிக அண்மித்த தினம் ஒன்றில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துவருகின்றது. என்றாலும் தேர்தலை எந்தவகையிலாவது பிற்படுத்துவதற்காக பொறுப்புக்கூறக்கூடிய பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளைக் கையாண்டு வருவதால், தேர்தல் உறுதியாக இடம்பெறுமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்காக நாட்டில் செயற்பட்டுவரும் தேர்தல் கண்காணிப்புகள் கோரிக்கை முன்வைத்திருப்பதென்ற கருத்தை உருவாக்குவதற்கு சிலர் முயற்சித்து வருவதைக் காணமுடிகின்றது.

இலங்கை, ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கேற்ப மற்றும் சரியான நேரத்தில் தேர்தல்களை நடத்துவதில் சிறந்த சாதனையைக்கொண்ட நாடாகும். எந்தவொரு ஜனநாயக நாடொன்றின் இருப்பு தீர்மானிக்கப்படுவது உரிய காலத்துக்கு நடத்தப்படும் தேவையான தேர்தல்கள் மூலமாகும்.

அதனால் இந்த நாட்டில் செயற்பட்டுவரும் எந்தவொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தத் தேர்தலையும் பிற்போடவேண்டும் என தெரிவித்ததில்லை என்பதை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்றோம். தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தேர்தல் நடத்துவது தொடர்பாக கேள்வி எழுப்புவது, தேர்தல் ஒன்று உரிய சட்ட விதிகளை மீறி, அரசியலமைப்புக்கு விரோதமான முறையில் நடத்தும் சந்தர்ப்பத்தில் மாத்திரமாகும்.

என்றாலும் தற்போது இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவ்வாறான பிரச்சினையை காணக்கூடியதாக இல்லை என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். அத்துடன், தேர்தல் ஒன்றை நடத்தும்போது அவதானிக்கவேண்டிய தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியிலான விடயங்கள் தொடர்பாக சரியான தீர்மானம் எடுக்கவேண்டியது தேர்தல் ஆணைக்குழுவாகும்.

அதன்மூலம் ஏதாவது பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால் அதற்கு நிகராக இலங்கை நாடாளுமன்றத்துக்கு தனது பெரும்பான்மையினரின் விருப்பத்துக்கமைய பொது தீர்மானம் ஒன்றுக்கு வரலாம். நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்வதும் மேலுமொரு கட்டமாகும். அதனால் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு என்ற வகையில் இந்தப் பின்னணியிலேயே நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம்.

அத்துடன், நாட்டில் நிலவும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பாக நாங்கள் நன்கு அறிகின்றோம். அதேபோன்று நாங்கள் மறக்கமுடியாத விடயம் ஒன்றும் இருக்கின்றது.

இந்தப் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு நாட்டை இட்டுச் சென்றவர்களில் முன்னணியில் இருப்பவர்கள் அந்தந்த காலங்களில் ஆட்சிசெய்த அரசியல் அதிகாரம் கொண்டவர்களாகும். தேர்தலுக்காக செலவிடப்படும் நிதி ஒரே தினத்தில் இடம் பெறக்கூடியதல்ல. அது இரண்டு மாதங்களுக்கு அதிக காலம் படிப்படியாக இடம்பெறக்கூடியதாகும்.

அதனால் இந்தச் சந்தர்ப்பத்தில் தேவையாக இருப்பது தனது ஆட்சிக்கான மக்கள் விருப்பத்தை உரசிப்பார்ப்பதைத் தவிர, வேறொன்றும் இல்லை. எந்தவொரு அரசாங்கத்தினதும் இறுப்பு மக்களின் நம்பிக்கை இருக்கும் வரைக்குமே நிலைத்துச்செல்லும். இவ்வாறான பின்னணியில் தேர்தல் செலவு என்பது எதிர்கால முதலீடாகவே நாங்கள் நம்புகின்றோம் என்று குறிப்பிடுகின்றன அந்த அமைப்புகள்.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு தேர்தலை திட்டமிட்டபடி நடத்துவதே சாலச் சிறந்தது. தேர்தலை ஒத்திவைத்து இழுபட வைப்பதனால் இப்போதைய ஆட்சியாளர்களுக்கு தொடர் நெருக்கடி மட்டுமே வரும் வாய்ப்பிருக்கிறது. எனவே, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வாய்ப்பை ரணில் தலைமையிலான அரசு தவறவிடக்கூடாது.

# எமக்காக உயிர் நீத்த எம் மண்ணின் தியாகிகள்...




இருநூற்றாண்டில் கால்பதிக்கும் எமது சமூகம், இந்த இனவாத நாட்டில் ஏனைய சமூகத்தினரைப் பொறுத்தவரையில் ஒரு தாழ்த்தப்பட்ட, கேளிக்கை நிறைந்த, வந்தேறிகளாக அடையாளம் கொடுக்கப்பட்டு இதுவரைகாலமும் வந்துள்ளது. அடிமை வாழ்விற்கு என்ன என்ன மறுபெயர்கள் வழங்க முடியுமோ அத்தனை புனைப்பெயர்களையும் பெற்று தனக்கென்று ஒரு மொழி, தனக்கென்று ஒரு கலை, கலாசாரம், சரித்திரம் ரீதியான பராம்பரியங்களையும், தனக்கென்று இலக்கியங்களைக்கொண்டு முட்டிமோதி இங்கே மலையகம் தன்னை ஒரு தேசிய இனமாக நிலைநிறுத்த எத்தனையோ பெரும் முயற்சிகளை செய்துகொண்டுதான் இருக்கிறது.

உழைப்பு கருதி ஏமாற்றி இந்த நாட்டக்கு அழைத்துவரப்பட்டு இந்த நாட்டுக்காகவும் மண்ணின் உயர்வுக்காகவும் உழைத்து மாண்டுபோன மக்களுக்கு சக மனிதன் என்றோ அல்லது இந்நாட்டின் மக்கள் என்றோ கௌரவத்தைக் கூட வழங்க இந்த இருநூறு ஆண்டுகள் வந்த நிலையிலும் சக மக்களும், அரசியல் தலைவர்களும் இன்றும் முன்வரவில்லை. இவர்களும் அதற்கான எந்த அடிப்படை மாற்றங்களை நோக்கிய எந்த முயற்சிகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அரசியல், சமுக, பொருளாதார ரீதியில் ஒதுக்கப்பட்டிருந்தாலும், சுரண்டப்படும் எங்களின் வாழ்க்கையை வாழ சுயநலத்திற்காக எங்களின் தனித்துவமான தனித்துவங்களோடு தேசிய இனமாக தன்னை மாற்றியமைத்துக்கொள்ளவும் எங்களின் சுதந்திரத்திற்காகவும், உரிமைகளுக்காகவும் இன்றுவரை தொடர்ந்து ஓடிக்கொண்டுதான் இருக்கிறோம்.

இந்த காலவோட்டத்தின் மத்தியில் எங்களின் துயரம் நிறைந்த வாழ்கையின் பயணத்திலும் இலட்சக்கணக்கான உயிர்களை இந்த மண்ணுக்காக தாரைவார்த்துள்ளோம். ஒரு புறம் இங்கு ஏமாற்றி அழைத்துவரப்பட்டபோதும், அதற்கு பின்னரான கொடிய வாழ்வியலின்போதும், மறுபுறம் தங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக போர் முரசு கொட்டியபோதெல்லாம் முதலாளித்துவத்தின் கைக்குழந்தைகளாலும், பொலிஸின் துணைகொண்டும் இந்த மண்ணில் மாண்ட தொழிலாளிகளின் உயிர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவைகள். அந்த வகையில் இலங்கை பெருந்தோட்டத் தொழிற்றுறையில் குறிப்பாக, தேயிலைத் துறையில் எழுந்த போராட்டங்களையும் அப்போராட்டத்தில் உயிர் தியாகம் செய்த வீர தொழிலாள தியாகிகளையும் இங்கே நாம் நினைவுகூராமல் இருப்பது அபத்தம் நிறைந்த ஒன்று.

மனித சிந்தனையை தலையிட்டு கட்டிய விலங்குகளை எல்லாம் தறித்தெறிய வேண்டும் என்ற காரணத்துக்காக எவன் ஒருவன் தன் வாழ்நாளையே அர்ப்பணித்து வாழ்கிறானோ அவனே மனித ஜாதியில் உயர்ந்தவன் என்று இலக்கியங்களில் எங்கோ வாழ்ந்து மறைந்த தியாகிகளைக் கொண்டாடும் சமூகம் எப்போதும் நம்மைச் சுற்றி நமக்காக உயிர்நீத்த தியாகிகளை நினைவுகூருவதும் இல்லை, அதனை எதிர்கால சமுதாயத்திற்காக கொண்டுசென்றதும் இல்லை என்பதை மலையகத் தியாகிகள் வரலாற்றில் காணமுடிகிறது.

அவ்வாறு மறைக்கப்பட்ட வரலாறுகளில் ஒன்றுதான் உரிமைப் போராட்டத்திற்காக உயிர்நீத்த மலையகத் தியாகிகள். தேயிலைச் செடியின் வேர்களுக்குள் உரமாகிப்போன அவர்களின் வஞ்சிக்கப்பட்ட வரலாறுகள் தொடரும் நிலையிலும் வரலாற்றுப் பக்கத்தில் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காக உயிர் நீத்து தமது பெயர்களைப் பதித்துச்சென்ற அந்த வீரர்களை நினைவுகூருவது இல்லை என்பது பெரும் மனக்கசப்பே.

இலங்கை பெருந்தோட்டத்துறை வரலாற்றில் 1940ஆம் ஆண்டு முதலாம் திகதி மத்திய மாகாண ஹேவாஹெட்ட பகுதியிலுள்ள முல்லோயா தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிய போராட்டமே உழைக்கும் வர்க்கத்தின் முதலாவது போராட்டமாக அமைந்த அதேவேளை கோவிந்தனோடு ஆரம்பிக்கப்பட்ட வரலாறானது 2020 ஒக்டோபர் மாதம் காராளன் மணிவண்ணன்வரை நீண்டதொரு வரலாறானது ஒருபுறம் திட்டமிட்டு மறைக்கப்பட்டும் மறுபுறம் அறிந்தவர்களும் தெரிந்தவர்களும் அதனை உரிய முறையில் எதிர்காலத்திற்காக கொண்டு செல்லவில்லை என்பதோடு உரிய முறையில் ஆவணப்படுத்தப்படவில்லை என்பதும் கூட எம்மக்களுக்கு இளைத்த துரோகங்களில் இதுவும் ஒன்றே.....

எம் மக்களின் வரலாறுகளோ மலர் பாதையில் நிரம்பியவை அல்ல. அவை சிவப்பு கறுப்பு நிறங்களின் சேர்வை. கல்லும் முள்ளும் நிறைந்த பாதை. அது தினமும் பல உயிர்களை இங்கே இழந்து இந்த மண்ணுக்காக உடலையும் உயிரையும் கொடுத்து வளர்ந்ததொன்றாகும்.

அந்த வகையில் மலையக மக்களின் சிறிய வெற்றிகளும், பெரிய போராட்டங்களும், வரலாற்று பெருந்துரோகங்களும் நினைவுகூரப்பட வேண்டியவை. மலையகத்தவர் என தன்னை மார்தட்டிக் கொள்பவர்களின் கடப்பாடு என்பதோடு, பொதுவாக மலையகத்தில் உயிர் நீத்த தியாகிகள் அனைவரும் தொழிற்சங்கப் போராட்டங்களில் உயிர் நீத்தவர்களாக பட்டியலிடப்பட்டாலும் பல இடங்களில் இது ஓர் இன அரசியலையும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தையுமே சுட்டிக்காட்டியுள்ளது என்பதையும் வரலாற்றில் தெளிவாக அறியலாம். ஆனால், இன்னொரு கசப்பான விடயம், மலையகத்தில் இயங்கும் தொழிற்சங்கங்களும் இதுவரை இவர்களைப் பற்றி பேசியதும் இல்லை, நினைவுகூரியதும் இல்லை.

இருநூறு வருட வாழ்வியலைப் பேச ஆயத்தமாகும் நாம், இனிவரும் காலங்களில் இவர்களை மறந்துவிட்டு எந்த நிகழ்வையும் ஏற்பாடு செய்வது பொருத்தமற்ற ஒன்று. அதேபோல் இளைய சமுதாயமாவது முன்னோர்கள் விட்ட பெரும் தவறுகளை விடாமல் இருப்போம் என்பதை இங்கே கூறுவதோடு உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளை நினைவுகூருவோம்.

மலையகத் தியாகிகள் தினம் நிகழ்வை இதுவரை தொடர்தேர்ச்சியாக தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் பிடிதளராதே போன்ற அமைப்புகள் மட்டுமே ஜனவரி பத்தாம் திகதியன்று அவர்களுக்கான நினைவஞ்சலிகளை சவால்களுக்கு மத்தியில் செய்து வருகின்றார்கள். அப்படியான நிகழ்வுகளுக்குப் பிறகு சி.ஐ.டி. விசாரணைக்கும் முகங்கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றனர்.

மா. ஜீவன்ராஜ்

# பிஞ்சில் பூக்கும் மரம்



கலப்பின வீரியச் செடி, கொடிகளை உருவாக்கும் தாவரவியலாளர்கள், சில மாதங்கள் காத்திருந்தால்போதும். தாங்கள் உருவாக்கிய புதிய கலப்பினத் தாவரத்தின் பலனை பார்த்துவிடலாம். ஆனால், இதே உத்தியில் மர வகைகளுக்குச் செய்ய முடியுமா, முடியாது. இயற்கையில் மரங்கள் பூக்கும் பருவத்தை எட்ட ஏழு முதல் 10 ஆண்டுகள் பிடிக்கும்.

எனவே, கலப்பின முயற்சிகளுக்குப் பலனைக் காண, ஆராய்ச்சியாளர்களுக்கு ஏழெட்டு ஆண்டுகளாவது ஆகும்.

ஆனால், அமெரிக்காவின் ஜோர்ஜியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள், மரபணு திருத்தக் கருவியான கிரிஸ்பர் தொழில்நுட்பத்தை நாடியுள்ளனர்.

இதன்மூலம், பூக்க எட்டு ஆண்டுகள் பிடிக்கும் ஒரு மர வகையின் மரபணுக்களில் திருத்தம் செய்து வளர்த்தபோது, அந்த மரம் ஏழெட்டு மாதங்களிலேயே பூத்துக் குலுங்கியது.

எனவே, கிறிஸ்பர் மரபணு திருத்தம் மூலம் மனிதர்களுக்கு பயனுள்ள வகையில் மரக்காடுகளை உருவாக்க, புதிய வீரிய ஒட்டுமரங்களை விஞ்ஞானிகளால் விரைவில் உருவாக்க முடியும்.

# கின்னஸ் சாதனை படைத்த கார்!



அவுஸ்திரேலியாவிலுள்ள நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகப் பொறியியலாளர்கள் சன்ஸ்விப்ட் 7 என்ற காரை உருவாக்கியுள்ளனர். சூரிய ஒளி மின்சாரத்தால் ஓடும் இந்தக் கார், அண்மையில் கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. ஒரு முறை மின்னேற்றம் செய்து, 1,000 கிலோமீற்றர் தூரத்தை 12 மணிநேரத்திற்குள் பயணித்துக் காட்டியுள்ளது சன்ஸ்விப்ட் 7.

நியூ சவுத் வேல்ஸின் பொறியியலாளர்களின் இரு ஆண்டுகள் முயற்சியால் உருவான சன்ஸ்விப்ட் காரின் எடை வெறும் 500 கிலோ தான். ஓட்டுனருக்கான பல வசதிகளை தவிர்த்ததால்தான், இலகுவான மின் வாகனத்தை உருவாக்க முடிந்தது. விரைவில் சூரிய ஒளி மின்சார வாகனங்களுக்கான பந்தயத்தில் சன்ஸ்விப்ட் 7 பங்கேற்கப் போகிறது.

# நக்கல் நமசிவாயம்

சாவு வீடுகளுக்கு, சுப காரியங்களுக்கு அரசியல்வாதிகள் வர ஆரம்பிச்சிட்டாங்கள்.. தேர்தல் ஒண்டு வரும் எண்டு செய்தி வந்த கையோட மக்கள் மேல பாசத்த பொழிய ஆரம்பிச்சிட்டாங்கள்...



# இன்றைய நாளில்..

- ✸ 1881 – யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- ✸ 1946 – லண்டனில் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகளின் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் 51 நாடுகள் பங்குபற்றின.
- ✸ 1946 – ஐக்கிய அமெரிக்கத் தரைப்படையின் சிக்னல் கோர்ப்ஸ் நிறுவனம் முதற்தடவையாக வானொலி அலைகளை நிலாவில் தெறித்துப் பெறும் முயற்சியில் வெற்றிபெற்றது.
- ✸ 1966 – இந்திய - பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டுவர தாஷ்கந்த் உடன்பாட்டில் லால் பகதூர் சாஸ்திரி, அயூப் கான் ஆகியோர் கையெழுத்திட்டனர்.
- ✸ 1972 – சேக் முஜிபுர் ரகுமான் பாகிஸ்தானில் 9 மாதங்கள் சிறையில் கழித்த பின்னர் புதிதாக உருவான பங்களாதேஷுக்குத் திரும்பினார்.
- ✸ 1974 – யாழ்ப்பாணத்தில் 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் 11 பொதுமக்கள் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 09.01.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 136 5650 | 148 0721 |
| கனேடியன் டொலர் | 156 2 47 | 168 1051 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0458 | 44 2751 |
| யூரோ | 271 76 4 | 287 3473 |
| ஜப்பான் யென் | 1 6151 | 1 7276 |
| சிங்கப்பூர் டொலர் | 158 2387 | 17 6346 |
| ஸ்ரேலிங் பவுன் | 324 5 5 | 341 2538 |
| சுவிஸ் பிரான்ங் | 275 2440 | 3 3 8551 |
| ஐ.அ.டொலர் | 248,8363 | 260 4380 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 330 |
| குவைட் | குவைட் தினார் | 0,075 0754 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 352 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 7566 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5 44 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7432 |

# பொரளை, நாரஹேன்பிட்டி பகுதிகளில் ஆயுதக்குழுக்களை சேர்ந்த 10 பேர் கைது

பொரளை மற்றும் நாரஹேன்பிட்டி பிரதேசங்களில் ஆயுதம் ஏந்திய இரு குழுக்களை சேர்ந்த 2 பெண்கள் உட்பட 10 பேர் கூரிய ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பொரளை, சித்துல்வத்தை மற்றும் நாரஹேன்பிட்டி மெனிங் டவுன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே 2 வாள்கள், 6 கத்திகள், 6 இரும்புக் கம்பிகள் மற்றும் 3 ஹொக்கி தடிகள் என்பனவும் சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், யுவதி ஒருவரை அடிப்படையாகக் கொண்டு இரு பகுதிகளிலும் இரு குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்றதாகவும், அண்மையில் போதைப்பொருள் கடத்தலின் அடிப்படையிலும் மோதல்கள் இடம்பெற்றதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களின் கொலை சந்தேக நபரும் அடங்குவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பண்டாரவளையிலிருந்து கடத்தப்பட்ட கழிவுத் தேயிலை கம்பளையில் மீட்பு



(எம்.செல்வராஜா)

பண்டாரவளையிலிருந்து, உடுநுவர அந்தெஸ்ச பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்ட மனித பாவனைக்கு உதவாத 2 ஆயிரத்து 621 கிலோகிராம் கழிவுத் தேயிலையை கம்பளை பிராந்தியத்துக்கு பொறுப்பான விசேட அதிரடிப்படையினர் தவுலகல, கல்போர சந்தியில் வைத்து அதிகாலை கைப்பற்றியுள்ளனர். அத்துடன், நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அனுமதி பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட மேற்படி கழிவுத்தேயிலை மனித பாவனைக்கு உதவாது என சுற்றிவளைப்பினை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், கைப்பற்றப்பட்ட கழிவுத்தேயிலை கடத்தலுக்கு பயன்படுத்திய லொறியினையும் சட்ட நடவடிக்கைகளுக்காக தவுலகல பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி சட்டத்தரணி வருண ஜயசுந்தர, பிராந்திய கட்டளை அதிகாரி நிசேத பொன்னாது ஆகியோரின் ஆலோசனைக்கமைய அதிரடிப் படையின் கம்பளை பிராந்திய உதவி கட்டளையிடும் அதிகாரி ரோசன லீதிய பண்டார தலைமையிலான அதிகாரிகளே மேற்படி சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.





எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கொழும்பு மாவட்டத்திற்கான கட்டுப்பணத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்று (9) செலுத்தியுள்ளது. அக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் பலர் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு வந்து தேர்தலுக்கான கட்டுப் பணத்தை செலுத்தினர்.

# நானுஓயா டெஸ்போட் கோவில் உண்டியலை உடைத்து பணத்தை திருடிய சகோதரர்கள் கைது!

(நானுஓயா நிருபர்)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெஸ்போட் தோட்டம் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தின் வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த வழிப்பிள்ளையாருக்கு முன்வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைத்து பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வழக்கம்போல் பூசாரி கோவிலுக்கு சென்று பார்த்தபோது உண்டியல் திருட்டு போயிருந்ததைக் கண்டு, ஆலய நிர்வாகத்திடம் தெரிவித்து நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் திருட்டு சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாகவும், அத்தோடு சந்தேகத்தின் பேரில் இப்பிரதேசத்தில் வசிக்கும் 14 மற்றும் 16 வயதுடைய இரு சிறுவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது உண்டியலை உடைத்து காணிக்கைப் பணத்தைத் திருடியதாக ஒப்புக்கொண்டதாகவும், இவ் இருவரும் சகோதரர்கள் எனவும், இவர்கள் உண்டியலை உடைத்தபோது 5000 ரூபா பணம் இருந்ததாகவும் 4405 ரூபாவினை செலவு செய்துவிட்டு 595/= ரூபா பணம் மாத்திரம் சந்தேகநபரிடமிருந்து பறிமுதல் செய்ததாகவும், இதற்கு முன்னர் நானுஓயா டெஸ்போட் உள்ளிட்ட பல பகுதிகளிலும் திருட்டில் ஈடுபட்டு இவ்விருவர் மீது நானுஓயா பொலிஸ் நிலையத்தில் மூன்று திருட்டு முறைப்பாடுகள் உள்ளதாகவும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் நானுஓயா பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஜி. சி. ஜனக்க தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, கடந்த ஒரு வாரமாக நுவரெலியா, லிந்துலை, நானுஓயா ஆகிய பொலிஸ் பிரிவுகளிற்குட்பட்ட பல பகுதிகளிலுமுள்ள இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த உண்டியல் பணமும், அம்மனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்களும் திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூச்சுத் திணறல் ஏற்பட்டு 2 வயது சிறுவன் பலி

### மஸ்கெலியாவில் சம்பவம்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள காட்டு மஸ்கெலியா தோட்டத்தில் நேற்று முன்தினம் (08) காலை புட்டிப்பால் அருந்திக் கொண்டிருந்த இரண்டு வயதுடைய சிறுவன் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்தார். பால் அருந்திக்கொண்டிருந்த வேளை மூச்சுத் திணறல் ஏற்பட்டு, மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது, ஏற்கனவே சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன், அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. பிரேத பரிசோதனையில் தொண்டையில் பால் அடைத்ததால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# வங்கி ஏ.ரி.எம்மில் பணம் திருடிய வெளிநாட்டவர் உட்பட ஐவர் கைது

தென் மாகாணத்தின் பல பகுதிகளில் அரச வங்கிகளின் ஏ.டி.எம். இயந்திரங்களில் இருந்து பணத்தை திருடிய சந்தேகத்தின் பேரில் வெளிநாட்டவர்கள் இருவர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வெளிநாட்டவர்கள் கனேடிய மற்றும் பல்கேரிய பிரஜைகள் என தென் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கட்டுநாயக்க பிரதேசங்களில் வைத்து இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி, ஹிக்கடுவ, பத்தேகம ஆகிய இடங்களில் அமைந்துள்ள வங்கிகளின் ஏ.டி.எம் இயந்திரங்களின் கணினி கட்டமைப்புக்குள் ஊடுருவி மென்பொருள் அமைப்பை மாற்றி, இவர்கள் சுமார் ஒரு கோடி ரூபாவை திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



**புறக்கோட்டை பஸ்டியன் மாவத்தையில் இருவரை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பயன்படுத்திய, மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி கோனபொல பிரதேச வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பிலியந்தலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், 6 கிராம் ஐஸ் மற்றும் 2 கிராம் கஞ்சாவுடன் 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்தனர். போதைப்பொருள் ஏற்றிக்கொண்டு இருவர் மோட்டார் சைக்கிளில் வருவதாக மேல்மாகாண புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2022.01.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4994
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,384,431.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 9 2 0 1 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3236
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,329,466.80
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 36 40 78 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1449
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,188,478.80
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 7 8 1 1 6 3

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1024
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 141,244,094.80
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 03 06 28 76

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 303
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,537,459.60
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 11 25 38 45
விசேட இலக்கினம் ரிஷபம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1342
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 291,786,478.00
ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கங்கள் 28 36 46 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# நாட்டின் வனப்பகுதியில் குறைவு ஏற்படவில்லை!

## வனப் பாதுகாப்பு திணைக்களம் அறிவிப்பு



இலங்கையின் வனப்பகுதி 16 வீதமாக குறைந்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என வனப் பாதுகாப்பு திணைக்கள ஜெனரல் கே.எம்.ஏ. பண்டார தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகச் செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளதுடன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது வனப்பாதுகாப்பு திணைக்கள ஜெனரல் இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறையே வனப்பரப்பு குறித்து மதிப்பீடு செய்யப்படுவதுடன் 2020ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நிறைவடையவுள்ளது. 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, இலங்கையின் இயற்கை காடுகள் மொத்தப் பரப்பளவில் 29.15% (1,912,970 ஹெக்டேயர்) என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய மனித செயற்பாடுகள் காரணமாக காடுகளின் அளவு ஓரளவு குறைந்துள்ளதாகவும், ஆனால் ஊடகங்களில் கூறப்பட்டுள்ளபடி காடுகளின் அளவு 16% வரை ஒருபோதும் குறையவில்லை எனவும் வனப்பாதுகாப்பு திணைக்கள ஜெனரல் தெரிவித்தார்.

குறித்த ஊடக அறிக்கையின்படி, இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 16% மாத்திரமே வனப்பகுதி இருந்தால், நாட்டில் தற்போதுள்ள வனப்பகுதி 1,040,000 ஹெக்டெயராக இருக்க வேண்டும், அதாவது 2015ஆம் ஆண்டிலிருந்து ஏழு ஆண்டுகளில் 872,970 ஹெக்டெயர் காடுகள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய அவர், ஒரு வருடத்துக்கு 124,710 ஹெக்டெயர்களும் நாளொன்றுக்கு 341 ஹெக்டெயர் காடுகள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

காடுகள் தொடர்பில் தரவுகளை வழங்கும்போது, காடுகள் மதிப்பிடப்பட்ட விதம் விவரிக்கப்பட வேண்டும். காடுகளின் வரையறை, காடுகளின் அளவை மதிப்பிடும் முறை மற்றும் காடுகளின் அளவை மதிப்பிடுதல் போன்ற அடிப்படை புள்ளி விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். வனப்பரப்பு குறைந்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளில் உரிய தரவுகள் கிடைத்ததற்கான எந்த ஆதாரமும் குறிப்பிடப்படவில்லை என வனப்பாதுகாப்பு திணைக்கள ஜெனரல் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும், குறித்த ஊடகச் செய்தியில் காட்டப்பட்டுள்ளபடி காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டிருந்தால், வனப்பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், பொலிஸார் மற்றும் வானிலிருந்து காடுகளைக் கண்காணிக்கும் இலங்கை விமானப்படை ஆகியவற்றால் கண்காணிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்வளவு பாரிய வன அழிவுகள் இந்த எந்த நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்படவில்லை.

வனப்பாதுகாப்புத் திணைக்களம் வன வரைபடங்களை புதுப்பித்து வருவதாகவும், அந்த நடவடிக்கைகளின் போது அவ்வாறான காடழிவு எதுவும் நடந்ததாக கண்காணிக்கப்படவில்லை என்றும் வனப்பாதுகாப்பு திணைக்கள ஜெனரல் நாயகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## செலான் வங்கி பீ.எல்.சி.

சிவில் வழக்கு ஏற்பாடுகள் சட்டத்தின் 225ஆவது பிரிவின் கீழ் பிஸ்கல் மூலமான பிஸ்கல் விற்பனை ருவன்வெல்ல மாவட்ட நீதிமன்றத்தில்

செலான் பேங் பி.எல்.சி.
(முன்னர் செலான் பேங் லிமிட்டட் என அழைக்கப்பட்ட)
செலான் டவர்ஸ், இல. 90, காலி வீதி, கொழும்பு-03

வழக்காளி

வழக்கு இலக்கம் -12/MB

-எதிர்-

முஹம்மது அமீன் மொஹம்மட் பர்தான்
இல.ஏ 67,
ஹிலகம.
கனன்தொட.

மேற்குறிப்பிட்ட இலக்கமுடைய வழக்கில் 2019.10.14ஆம் திகதி உள்ளடக்கப்பட்ட ஒரு தரப்பினரின் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் வழக்காளி வங்கிக்கு செலுத்த வேண்டிய முப்பத்தி இரண்டு இலட்சத்து நூற்றி பதினான்கு இருபத்தி இரண்டு சதம் ரூபா (3,200,114.22) பணம் மற்றும் இருபத்து ஐந்து இலட்சம் ரூபா பணத்திற்கான 2014,04.29 ஆம் திகதியிலிருந்து தீர்வை வரைக்கும் வருடாந்தம் 22% வட்டியும் வழக்கு கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதால் அதன்படி மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு சொந்தமான தற்பொழுது தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து பிஸ்கல் மூலம் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்து வழக்காளி வங்கிக்கு செலுத்துவதற்காக

**2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு அந்த காணி அமைந்திருக்கும் இடத்திலேயே பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்**

**மேலே குறிப்பிட்டுள்ள விடயத்திறகான அட்டவணை**

சப்ரகமுவ, மாகாணம் கேகாலை மாவட்டம். தெஹிகம்பல் கோரலே மேகொடபொத பத்துவே ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவிற்குள் இலக்கம் 109 கன்னன்தொட கிராம அலுவலர் பிரிவில் உள்ள பில்காவஹேன வத்த அல்லது அலிஉதுமலாகே ஹேன என்று அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான மானகே பிள்யு. ஆர். பி. த சில்வா என்பவரால் 1971.06.09ஆம் திகதியிடப்பட்ட 2716ஆம் இலக்க வரைபடத்தில் லொட் பி என்ற காணி. துண்டின் வடக்கில் வீதியையும் கிழக்கில் லொட் சி மற்றும் டீ தெற்கில் ஓடை மற்றும் வாழைத்தோப்பும் மேற்கில் அபகஹமுல ஹேன ஒருங்கே எல்லையைக்கொண்ட காணியின் பரப்பளவானது ஒரு றூட் நான்கு பேர்ச் (ஏ.0.-றூ.1-பே.4.00) விசாலமான காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டடம், மரங்கள், பழங்கள் போன்ற அனைத்தும் உள்ளடங்கலாக

இந்த நிலம் தற்போது அளவீடு செய்யப்பட்டு பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், தெஹிகம்பல் கோரலே மேகொடபொத பத்துவே ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவிற்குள் இலக்கம் 109 கன்னன்தொட கிராம அலுவலர் பிரிவில் உள்ள பில்காவஹேன வத்த அல்லது அலிஉதுமலாகே ஹேன என்று அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான மானகே டபிள்யு.எம்.எல்.ஆர்.வீரசிங்ஹ என்பவரால் 2011.11.07ஆம் திகதி அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2516ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 என்ற காணி துண்டின் வடக்கில் வீதியையும் கிழக்கில் லொட் சி மற்றும் டீ தெற்கில் ஓடை மற்றும் வாழைத்தோப்பும் மேற்கில் 2716ஆம் இலக்க வரைபடத்தில் லொட் பி மற்றைய துண்டானது எல்லைக்குட்பட்டது. காணியின் பரப்பளவானது ஒரு றூட் நான்கு பேர்ச் (ஏ.0.றூ.1-பே.4.00) விசாலமான காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டடம், மரங்கள், பழங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடங்கலாக.

இந்த காணியானது அவிசாவளையிலுள்ள காணி பதிவுசெய்யப்படும் அலுவலகத்தில் பாகம் / பக்கம்S147/250, S147/165 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** ருவன்வெல்ல நகரத்தில் இருந்து கேகாலை வீதி ஊடாக 5 Km கன்னன்தொடுவ சந்தி வரை சென்று வலது பக்கத்தில் உள்ள இஹலகம வீதியில் 1,6 Km ஆசியாவத்த வரை சென்ற பிறகு இவ்விடயத்திற்கான இடமானது வலது பக்கத்தில் காணியில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள். செலுத்தும் விதம்:-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 25%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலத்திற்காக செலவு செலவுகள்

கொள்முதல் விலையின் 75% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும். சட்டரீதியான வரி கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு. ஏலத் திகதியிலிருந்து 30. நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும் மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து. செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.**

**முகாமையாளர், (சொத்து), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456479, 014-2456473.**

மேலேயுள்ள ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிய சகல அதிகாரங்களும் வங்கிக்குண்டு.

**பதிவாளர் / பிரதி பிஸ்கல்**
**மாவட்ட நீதிமன்றம் - ருவன்வெல்ல**

# நான் வாயால் வடை சுடும் அரசியல்வாதி அல்லன்!

## நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம்

(எஸ்.கணேசன்)

“நான் வாயால் வடைசுடும் அரசியல்வாதி அல்லன். அதேபோல அரசியலுக்கு வந்து மக்கள் சொத்துகளை சுருட்டியதும் கிடையாது. மக்களுக்கு சேவை செய்வதே எனது முதன்மை இலக்கு. அந்த வழியிலேயே பயணம் தொடரும்.” - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை மற்றும் டயகம பிரதேசத்தின் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியுடைய செயற்பட்டாளர்களுக் கான விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் (08) தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான பழனி திகாம்பரம் தலைமையில் அக்கரப்பத் தனை லக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் விசேட அதிதியாக கலந்துகொண்டார்.

அத்தோடு, கட்சியின் பொது செயலாளர் எஸ்.பிலிப், பிரதி பொது செயலாளர் பா. கல்யாணகுமார், நிதி செயலாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன், உப தலைவர்களான ராஜமாணிக்கம், சிவானந்தன், தேசிய அமைப்பாளர் நகுலேஷ்வரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன், பிரதி தேசிய அமைப்பாளர் டி.கல்யாணகுமார் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“மலையக மக்களுக்காக உரிமை அரசியலை முன்னெடுப்பதற்காகவே தொழிலாளர் தேசிய சங்கம் உருவாக்கப்பட்டது. அந்த கொள்கையின் அடிப்படையிலேயே சங்கம் தற்போதும் பயணித்துக்கொண்டிருக்கின்றது.

2015ஆம் ஆண்டு நான் அமைச்சராக பதவியேற்றேன். குறுகிய காலப்பகுதிக்குள் தனிவீட்டுத் திட்டம் உட்பட மலையக மக்களுக்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தேன்.

அமைச்சராக நான் நேர்மையாக செயற்பட்ட தால்தான் எனக்கு அதிகூடிய விருப்பு வாக்குகளை வழங்கி மக்கள் நாடாளுமன்றம் அனுப்பிவைத்தனர். மக்கள் நம்பிக்கைக்கு விரோதமாக செயற்படமாட்டேன்.

நான் மற்றையவர்களைபோல வாயால் வடை சுடும் அரசியல்வாதி கிடையாது. சொல்வதை செய்து காட்டுவதே என் பழக்கம். அரசியலுக்கு வந்து சொத்துகளை இழந்துள்ளேன். மாறாக சேர்த்தது கிடையாது. எமது மக்களை முன்னேற்ற வைப்பதே எனது இலக்கு. மாறாக மக்களை வைத்து பணம் உழைக்க முற்படவில்லை.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றன. இதனை கொண்டாட முடியாது. ஏனெனில் மக்களின் வாழ்க்கை நிலை முழுமையாக முன்னேறவில்லை. இந்நிலைமையை இந்தியா, பிரிட்டன் மற்றும் இலங்கை அரசுகளுக்கு எடுத்துகூறுவதற்காக நினைவுகூரல் நிகழ்வுகள் நடத்தப்படும். பெப்ரவரி 26 ஆம் திகதி நுவரெலியா சினிசிட்டாவில் இந்நிகழ்வை நாம் நடத்தவுள்ளோம். ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், இந்திய தலைவர்கள் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எமது தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கி அவர்களை முதலாளிக ளாக்க வேண்டும்.” - என்றார்.



## நுவரெலியாவிற்கு சுற்றுலா வந்த பஸ் விபத்து; அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய பயணிகள்




(நானுஓயா நிருபர்)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதியில் கொழும்பு -ஹொரணையில் இருந்து நுவரெலியாவிற்கு சுற்றுலா வந்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் (08) பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில், கொழும்பு ஹொரணை பகுதியிலிருந்து நுவரெலியா விற்கு சுற்றுலா சென்றவர்கள் மூன்று நாட்களுக்கு பின்னர் மீண்டும் கொழும்பு - ஹொர ணையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ரதல்ல குறுக்கு வீதியில் அபாயகரமான வளைவில் பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக பஸ் சாரதியினால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் சுமார் 30 அடி தூரம் இழுத்துச் சென்று மரத்தில் மோதுண்டே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸின் முன்பகுதியானது பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பஸ்ஸில் இருந்த 47 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிறந்து சில நாட்களேயான பெண் சிசுவொன்று மீட்பு



(தலவாக்கலை நிருபர்)

பிறந்து சில நாட்க ளேயான பெண் சிசுவொன்று நேற்று (09) வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிசு பிறந்து சில நாட்களேயான பெண் குழந்தை எனவும், தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திற்கு அருகாமையில் இரவு வேளையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் காணப்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள் ளது.

குறித்த பெண் குழந்தையை லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த பெண் சிசுவை வீதியில் விட்டுச்சென்ற தாய் மற்றும் தொடர்புடையவர்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## அக்கரப்பத்தனையில் சிறுத்தைகள் நடமாட்டம்

### பொதுமக்கள் அச்சத்தில்



(எஸ்.கணேசன்)

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரப்பத்தனை நியூ கொலனி பகுதியில் மக்கள் வாழும் பகுதியில் கடந்த சில காலமாக சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதனால் மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அக்கரப்பத்தனை நியூ கொலனி பகுதியில் கடந்த காலங்களில் சிறுத்தைகள் இரவு வேளைகளில் மக்கள் நடமாடும் பகுதிகளுக்கு வருகை தந்து கால்நடைகளை பிடித்துச் செல்வதனை நாம் கடந்த காலங்களில் ஊடகங்களூடாக வெளிப்படுத்தியிருந்தோம்.

எனினும் இது குறித்து வனபாதுகாப்பு அதிகாரிகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த 07ஆம் திகதியன்று இரவு சிறுத்தை ஒன்று இப்பகுதியில் வசிக்கும் எஸ்.நாகராஜ் என்பவரின் வீட்டுக்கு வந்து செல்லும் காட்சி, அவரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி. டி.வி. கெமராவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், மக்கள் நடமாடும் பகுதியில் இரவு வேளையில் வெளிச்சத்திலும் சிறுத்தைகள் வருகை தந்து கால்நடைகளை கொண்டு செல்வதனால் இப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பொது மக்கள் உயிர்களுக்கும் சிறுத்தைகளின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், சிறுத்தையின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த, அதிகாரிகள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தமிழ் அரசியல் கட்சிகளை ஓரணியில் திரளுமாறு கோரி 5ஆவது நாளாகவும் மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்









(மன்னார் நகர் நிருபர்)

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கி ணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயற்படக் கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த 5ஆம் திகதிமுதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் மன்னாரில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் வடமாகாண இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னாரில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் நேற்று (9) 5ஆவது நாளாகவும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சிவில் அமைப்புகள், பாதிக்கப் பட்ட மக்கள், கல்விமான்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். இதில் கலந்துகொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, ‘‘தமிழ் அரசியல் கட்சிகள் இடையே அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு, கிழக்கு ஒரு தனி மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள்க’’ உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து தமது கோரிக்கை அடங்கிய மகஜரை வாசித்தனர்.

## காங்கேசன்துறையில் இலங்கை வங்கிக் காரியாலயம் திறந்துவைப்பு









(யாழ். நிருபர்)

காங்கேசன்துறையில் இலங்கை வங்கியின் காரியாலயம் நேற்று சுமார் 32 வருடங்களின் பின்னர் மீண்டும் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது. உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கை வங்கியின் காங்கேசன்துறை காரியாலயம் அப்பகுதி மக்களுடன் அவ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்திருந்தது.

இந்நிலையில், சுமார் 32 வருடங்களின் பின்னர் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நேற்று காங்கேசன்துறையில் மீள திறந்துவைக்கப்பட்டது.

குறித்த வங்கிக் கிளை திறப்பு நிகழ்வில் இலங்கை வங்கியின் பிரதி பொது முகாமையாளர், வடபிராந்திய முகாமையாளர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை வங்கியின் வங்கி முகாமையாளர்கள், வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## வவுனியா, உக்குளாங்குளம் கிராமத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

### கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை





(வவுனியா நிருபர்)

வவுனியா, உக்குளாங்குளம் கிராமத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்ததையடுத்து கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அனுசரணையுடன் உக்குளாங்குளம் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் விதமாக மக்களுக்கான விசேட விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது.

வவுனியா, உக்குளாங்குளம் கிராமத்தில் 3 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட தையடுத்து, மக்களுக்கு டெங்கு அபாயம் குறித்தும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்தும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை உக்குளாங்குளம் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மக்களது வீடுகள், காணிகள், வீதிகள், பொது இடங்கள் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர், பொலிஸார் இணைந்து பார்வையிட்டு அவற்றின் தன்மை குறித்து ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டதுடன், அதனை தொடர்ந்தும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. டெங்கு பரவக்கூடிய இடங்களை அகற்றுவது தொடர்பான ஆலோசனைகளும் வீடு வீடாகச் சென்று சுகாதாரப் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, உக்குளாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பு வைத்தியர் பிரசன்னா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகே, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சந்திரபத்மன், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மலேரியா தடை இயக்கத்தினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

# குவைத் - ஈரான் எல்லையில் நிர்க்கதியான இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்!



குவைத், ஈரான் எல்லைக்கு அருகாமையில் உள்ள பாலைவனத்தில் இலங்கை இளைஞர்கள் 06 பேர் வேலை செய்ய துன்புறுத்தப்பட்டு உணவும் கூலியும் வழங்கப்படாமல் நிர்க்கதிக் குள்ளாகியிருந்த நிலையில் மீட்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவர்கள் கிண்ணியாவில் உள்ள தரகர் ஊடாக குவைத்துக்கு வேலைக்குச் சென்றுள்ளனர்.

இந்த இலங்கையர்கள் குவைத்தில் ஷேக் ஒருவரால் நடத்தப்படும் பண்ணையில் பணி புரிந்து வந்தனர்.

இந்தப் பண்ணையில் இருந்து இரவு நேரத்தில் குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு செய்த தொலைபேசி அழைப் பின்படி, அவர்களை மீட்கும் நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த இளைஞர் கள் குழுவை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளதுடன் அவர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கஞ்சா செடிகளுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கைது



மொனராகலை பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் 600 கஞ்சா செடிகளுடன் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனையின் போது உலோக ஸ்கேனர் ஒன்றையும் மீட்டுள்ளதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

கஞ்சா செடிகளுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலதிக விசாரணைக்காக மொனராகலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இதேவேளை, சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் குழுவொன்று மொனராகலை பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.





## Medical Organization Vacancies

Vd qd qdotsdc Ldclb kNqf mly shmmknnjhmf enq cdclb sdc hmchuhct kr sn inhmntqsd l -

- Ldclb kNeebdq(L kd) RKL B qdf hrsdqdc
- Mtqrd. Ogkdansnl hrs(Edl kd)
- Qdbdoshmmhrs. B rghdq
- Bnl otsdqNodq snq(L kd. Edl kd)

Vnqjhmf gntqr 9Vddjc xr 7-// L - 3-2/ OL
R stqc x 7-// L - o-// OL

Okd rd enqv qc xntqBU'r sn9l dclrdmrdbnnl an fl hbnl

Enql nqd cds hr b kk- /6627655/4

## RECEPTIONIST – (FEMALE)

Pt kheb shnmr

- Bnl otsdqjmnvkdcfd vhsg vhmcnvr & LR Neehbd vhsg F-B-D- . K-

Fdmdq kBnmchshnmr

- Fnnc bnl l mc hmDmfkhrg-
- fd adsvddm1/ - 17 xd qr-
- B mchc sdr eqnl J stmxjd, Rddctv , Mdfnl an, J mc m, l -Dk qd vntkc ad oqdedqqdc-

## PURCHASING ASSISTANT (MALE/FEMALE)

Pt kheb shnmr

- Oqdedrrhmm kpt kheb shnmhmotqpg rhmf L mfdl dmsvntkc ad cu ms fdntr-
- Vnqj Dwodqhdmbd o - 1 xd qr hmsgd rhl hk q b o blsx
- Fnnc hmsdqodqrnm k mc bnl l tmhb shnmrjhkkr
- Bnl otsdqjmnvkdcfd vhsg vhmcnvr & LR neehbd vhsg F-B-D- . Kpt kheb shnm-

Fdmdq kBnmchshnmr

- Fnnc bnl l mc hmDmfkhrg-
- fd adsvddm1/ - 17 xd qr-
- B mchc sdr eqnl J stmxj , Rddctu , Mdfnl an, J mc m, l -Dk qd vntkc ad oqdedqqdc-

Okd rd b kkenq
oonhmsl dmsr9/001141324. /001141327

## TEACHER

Dmfkhrg l dchl mtqrdqx. oqdrbgnnksd bgdqenq bg qsx mtqrdqx hmA kf k, V ss k-
R kqx mdfnshakd cdodmchmf nmpt kheb shnmr mc dwodqhdmbd-
Okd rdrdmc BU, bnudqkdssdq, mc r kqx dwodbs shnmr sn 9bgd l l nsn1 fl hbnl

## WE ARE URGENTLY RECRUITING

- RRHRS MS BBNTMS MS
- BBNTMSR DWDBHSHUD
- QDBDOSHNMHRS

Vnqj dwodqhdmbd vhkkad m ccdc cu ms fd
R kqx Mdfnshakd (A rdc nmDwodqhdmbd) mc Oqnuhchmf Ennc
kk ookhb shnmr Rgntkc Qd bg Sgd Adknv vhsghm o/ C xr neSghr cudqshrdl dms Vhsg Sgd Onrhshnm Rs sd NmSgd Sno Kdes BnqmdqNeSgd Dmudkno Nq
Okd rd Dl hk-GQL mfdq
Ehmf q Snvm& Bntmsqx Bkta (Ous)Ksc, Mn94/. 10, Nkc Jdradv Qn c, Q sgsg m olshx , Anqkdrf l tv
Sdk9/0014/8565. /0014/82/7
Dl hk9g ehmf bnl


# யாழ்.பொற்பதியில் புலிகளின் ஆயுதங்களைத் தேடி அகழ்வு



யாழ்ப்பாணம் கொக்குவில் பொற்பதி வீதியில் தனியார் காணி ஒன்றில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்ட இடத்தினை அகழ்வதற்கு நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு குறித்த பகுதியினை அகழ்வு செய்யும் பணி நேற்று திங்கட்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

பொற்பதி வீதியில் விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்திருந்த பகுதியில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த பகுதியில் தேடுதல் நடத்தி, ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ள இடங்களில் அகழ்வுகளை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு, அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

# வைத்தியசாலை சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பால் பாதிப்பு



நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் நேற்று சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டமையினால் பல வைத்தியசாலைகளின் இயல்பு நடவடிக்கை பாதிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ற வேதனம் அல்லது கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை, பெற்றுக் கொண்டுள்ள வங்கி கடனுக்கு வட்டி வீதத்தை அதிகரித்தமை மற்றும் புதிய ஆட்சேர்ப்பு ஆகியனவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் அவசர விபத்துச் சேவை உள்ளிட்ட வைத்தியசாலையின் பல்வேறு வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

எனினும், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்திய சாலை உள்ளிட்ட மேலும் சில வைத்திய சாலைகளில் இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

# ரியூசனுக்கு வந்த 10 வயது சிறுமியை பலாத்காரம் செய்த ஆசிரியர் கைது

ஹொரவபொத்தானை பிரதேசத்தில் ரியூசன் வகுப்பில் கலந்து கொண்ட 10 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் நேற்றுமுன்தினம் (08) மாலை கைது செய்யப்பட்டதாக ஹொரவபொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு அதே வயதுடைய ஒரு மகளும் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகத்திற்கிடமான ஆசிரியர் நடத்திய ரியூசன் வகுப்பில் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுமியும் கலந்து கொண்டதாகவும், அங்கு துஷ்பிரயோகம் நடந்ததாக தகவல் வெளியாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அன்றைய தினம் சிறுமி வீட்டிற்கு வந்து வகுப்பின்போது தான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக பெற்றோரிடம் கூறியதாகவும் சிறுமியின் பெற்றோர் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சிரேஷ்ட ஊடகர் பிள்ளை காலமானார்



வீரகேசரி, தினகரன் உள்ளிட்ட பத்திரிகைகளில் கடமையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.என். ஆர். பிள்ளை காலமானார்.

நீண்டநாள் சுகயீனத்திற்கு பின் எஸ்.என்.ஆர். பிள்ளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் நேற்று 9ஆம் திகதி கல்கிசையில் உள்ள மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5 மணியளவில் கல்கிசையில் உள்ள பொது மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன.

# களுத்துறை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன மாநாடு







(பேருவளை பீ.எம்.முக்தார்)

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் (8) பேருவளை மருதானையில் உள்ள முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் எம்.இக்பால் ஸம்ஸுதீன் ஜே.பி.தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டின் 2023ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக களுத்துறை முன்னாள் நகர பிதா எம்.எம்.எம்.ஜெளபர் தெரிவு செய்யப்பட்டார். புதிய நிர்வாகிகள் தெரிவின் பின்னர் உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண வைபவமும் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முன்னாள் தலைவருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பேருவளை நகர சபை தலைவர் மஸாஹிம் முஹம்மத், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகள் சம்மேளன தேசியத் தலைவர் லுக்மான் சஹாப்தீன், தேசிய உப தலைவர்களான ஷாம் நவாஸ்,பௌஸர் பாரூக், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ஏ.டபிள்யூ.எம்.அஜ்வாத், பாணந்துறை பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் தாஹிர் பாஸி,பேருவளை பிரதேச சபை எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் ஏ.ஆர்.எம்.பதியுத்தீன், முன்னாள் அதிபர் அப்துல் அஹ்லா உட்பட நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பல முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

செயலாளர் றிஸ்மி மஹ்றூப் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்து அண்மையில் காலமான ஏ.ஸீ.பக்கீர் முஹம்மத், முஹம்மத் நாளிர் ஹாஜி, மஹ்றூப் மாஸ்டர்,ஏ.ஐ.எம்.மர்ஸூக் ஹாஜியார், ஆயுர்வேத வைத்தியர் முஹம்மத் பாழில் ஜே.பி. மற்றும் ஏ.எச்.எம்.ஸவாஹிர் ஹாஜியார், புளத்சிங்கள பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.நியாஸ் முஹம்மத் உட்பட பலருக்காகவும் பாத்திஹா ஓதி துஆப் பிரார்த்தனையும் செய்யப்பட்டது. காரி மௌலவி எம்.எஸ்.எம்.றஸீன்(கபூரி) துஆ ஓதினார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் முஸ்லிம் கிராமங்களின் குறைபாடுகள் பற்றி இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.








**மிஷன் டீ விசன் புகைப்பட, வீடியோ படப்பிடிப்பாளர் சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை(07) மாலை ஆமர் வீதி, கொழும்பு -12இல் உள்ள பிரைட்டன் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள புகைப்பட, வீடியோ படப்பிடிப்பாளர்கள் கலந்து சிறப்பித்தனர். இலங்கையின் முன்னணி இசைக்குழுவான முருகேஷ் இசைக்குழு இசைவழங்கி நிகழ்ச்சியை மெருகேற்றினர். (படப்பிடிப்பு - மொஹம்மட் நஸார்)**

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் விதம்: மு.கா. தலைவர் ஹக்கீம் கலந்துரையாடல்





கண்டி, மாத்தளை மாவட்டங்களின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், மத்திய குழு உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையிலான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் விதம் குறித்த கலந்துரையாடல் சனிக்கிழமை (7) கண்டி நகரில் நடைபெற்றது.

அதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேர்ந்து போட்டியிடுவதானால், போட்டியிடும் உள்ளூராட்சி மன்றங்களில் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படும் போதிய வட்டார மற்றும் ஆசன ஒதுக்கீடுகள் என்பவற்றை பொறுத்து, அக் கட்சியின் தலைமைத்துவத்துடனான பேச்சுவார்த்தையின் போது இணக்கப்பாடு ஏற்பட்டால் மட்டுமே அவ்வாறு சாத்தியமாகும் என்றும், அல்லாத பட்சத்தில் அந்த மாவட்டங்களின் எல்லா உள்ளூராட்சி மன்றங்களிலும் கட்சி பெரும்பாலும் தனித்தும் சிலவற்றில் வேறு கட்சிகளுடன் சேர்ந்தும் போட்டியிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

வட கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறே முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் வட கிழக்கைச் சேர்ந்த மாவட்டங்களில் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்-1974




ஒன்பது தமிழர்களைப் பலி கொண்ட தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்-1974 - இன்று 49 ஆவது நினைவு ஆண்டு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

## நடந்ததென்ன?

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த உலகத் தமிழர்கள் பெருமளவில் தயாராகி வந்தனர்.

இந்தத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த இலங்கை அரசாங்கம் அப்போது விரும்பவில்லை. கொழும்பு மற்றும் யாழ்ப்பாண மேயர் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள விழா அமைப்பாளர்களுக்கு அரசாங்கம் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தியது. மாநாட்டிற்கான திறந்தவெளி அரங்குகளை நிர்மாணிப்பதற்கான அனுமதியும் கடைசி நிமிடம் வரை வழங்கப்படவில்லை.

ஆயினும், 1974ஆம் ஆண்டு 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமாகக் கொண்டாட வேண்டும் என்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவகம் தீர்மானம் எடுத்தது. அப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் கீழ் இருந்த இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் நெருங்கிய ஆதரவாளராகவும் அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராகவும் இருந்த யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா அதனை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாது தடுப்பதற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி வந்தார். இதனை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென்பதில் அரசாங்கம் முனைப்பாக இருந்ததால், யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக, யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்காக விசாவுக்கு விண்ணப்பித்த அந்நிய மொழியியலாளர்களான தமிழ் ஆராய்ச்சியாளர்கள் பலரின் விசாக்கள் மறுக்கப்பட்டன.

இந்த இடையூறுகளுக்கு மத்தியிலும், மாநாட்டு அமைப்பாளர்களும் தமிழ்மக்களும் ஏற்பாடுகளைத் தொடர உறுதியாக இருந்தனர். தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தமிழ்மக்களின் பேராதரவையும் விடாப்பிடியான முடிவையும் கண்ட அரசாங்கம் சிறிது கீழே இறங்கி, குறைந்த எண்ணிக்கையிலான தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே விசாக்களை வழங்கியது.

அதேவேளை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியின் நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க அஞ்சியோ என்னவோ தமிழாராய்ச்சி மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் தம்பையா, யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதை விரும்பவில்லை. ஆயினும், ஏனைய அனைவரும் யாழ்ப்பாணத்திலேயே நடத்த வேண்டுமென்பதில் உறுதியாக இருந்ததால், அவர் வேறு வழியின்றித் தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்தார். ஆனால் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியை எந்த சக்தியாலும் கட்டுப்படுத்த அனுமதிக்கமுடியாது என்று கருதிய பேராசிரியர் சு.வித்தியானந்தன், மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் தலைமைப் பொறுப்பைத் துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டார்.

அரசின் இந்த நெருக்கடியான கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தலைமையின்கீழ் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய, திட்டமிட்டபடி 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஜனவரி 3 ஆம் திகதி மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வடமாகாணத்திற்கு வெளியில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான தமிழ் ஆர்வலர்கள் யாழ்ப்பாண நகருக்கு வந்து சேர்ந்தனர்.

ஜனவரி மாதம் 10ஆம் திகதியே மாநாட்டின் இறுதி நாளாக இருந்ததால் அன்றைய நாள் மிகவும் சிறப்பாக ஆய்வரங்க நிகழ்ச்சிகள் மற்றும் பண்பாட்டு ஊர்வலங்கள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆய்வரங்கத்தின் இறுதி நிகழ்ச்சியாக "மொழியின் மகத்துவம் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட பண்பாடு" என்னும் தலைப்பில் தமிழ்மொழி ஆய்வாளர்களினால் ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் நைனா முகமது, இறுதியாக சிறப்புரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பல்வேறு அலங்கார ஊர்திகளின் பண்பாட்டுப்பவனி இடம்பெற்றபோது, பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டிருந்தனர். ஊர்வலத்தின்போது, புகைக்கூண்டுகள், பொம்மலாட்டம், நடன நிகழ்ச்சிகள், சிலம்படி மற்றும் கண்ணைப் பறிக்கும் வாண வேடிக்கைகள் என்பனவும் இடம்பெற்றன. உலகத் தமிழர்கள் ஒன்றுகூடி, உணர்வு பூர்வமாகக் கொண்டாடிய அந்த வெற்றி விழாவைக் கண்டு சகிக்காத பொலிஸார், 10ஆம் திகதி இறுதிநாள் கலை, பண்பாட்டு ஊர்வலம் நடைபெற்றபொழுது குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஏற்கனவே திட்டமிட்டபடி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரவின் தலைமையில் 40 பொலிஸாரைக் கொண்டுவந்து தமிழ் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

அதேவேளை, மின்கம்பியை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதும் மின்கம்பி அறுந்து விழுந்ததில் பலருக்குக் காயங்களும் ஏற்பட்டன. அதேவேளை மாநாட்டு ஆய்வரங்க மேடைகளும், அலங்காரப் பந்தல்களும் பொலிஸாரினால் உடைத்தெறியப்பட்டன. இந்த மிலேச்சத் தனமான தாக்குதலில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் ஒன்பது தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு, 50க்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். அதுவரை நிலவிய மகிழ்ச்சியும், உற்சாகமும் இருந்த இடம் தெரியாமல்போய் சிறிது நேரத்திலேயே அந்த இடம் மயான பூமியாகக் காட்சியளித்தது.

அன்று இந்தப் படுகொலைகளை மேற்கொண்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகரவுக்கு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க "பொலிஸ் அத்தியட்சகராகப்" பதவி உயர்வு வழங்கி கௌரவித்தார்.

01. வேலுப்பிள்ளை கேசவராஜன் - மாணவன், வயது 15
02. பரம்சோதி சரவணபவன் - வயது 26
03. வைத்தியநாதன் யோகநாதன் - வயது 32
04. ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம்- ஆசிரியர், வயது 53
05. புலேந்திரன் அருளப்பு - தொழிலாளி, வயது 53
06. இராசதுரை சிவானந்தம் - மாணவன், வயது 21
07. இராஜன் தேவரட்ணம் - வயது 26
08. சின்னத்துரை பொன்னுத்துரை- ஆயுள்வேத வைத்தியர், வயது 56
09. சின்னத்தம்பி நந்தகுமார் -மாணவன், வயது 14 ஆகியோர் உயிரிழந்தனர்.

# கொக்குவில் பொது சுகாதார உத்தியோகத்தரின் வீட்டை உடைத்து 17 பவுண் நகை கொள்ளை

## சந்தேக நபர்கள் 3 பேர் கைது





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்தில் பொது சுகாதார உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டை உடைத்து 27 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி உட்பட 17 பவுண் கொண்ட தங்க ஆபரணங்கள் திருடிச் சென்ற 3 பேரை நேற்று (9) கைதுசெய்ததுடன், திருடப்பட்ட தங்க ஆபரணங்கள், மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பவற்றை மீட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.கே.யு.பி.விமலரத்தின தெரிவித்தார்.

பொதுசுகாதார உத்தியோகத்தரும் அவரது மனைவியும் கடந்த 3ஆம் திகதி காலையில் தனது வீட்டை பூட்டிவிட்டு கடமைகளுக்கு சென்று பிற்பல் 1 மணிக்கு வீடு திரும்பியபோது, வீட்டின் கூரையை உடைத்து வீட்டிற்குள் இறங்கிய திருடர்கள் அறையின் அலுமாரியை உடைத்து அங்கிருந்த தாலிக்கொடி, காப்பு, மோதிரம் உட்பட 17 பவுண் தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் உப பரிசோதகர் பி.சசீந்திரன் தலைமையிலான சார்ஜன்ட் ஆர்.நவராஜன், மேகராஜா, தரன், சிவகுமார், குமார, ஜெயந்த டபிள்யூ.பி. அரன்சியா ஆகியோர் கொண்ட பொலிஸ் குழுவினர் குறித்த திருடர்களை அவர்களது வீடுகளில் வைத்து கைதுசெய்ததுடன், திருடப்பட்ட தங்க ஆபரணங்கள், பணம் மற்றும் திருட்டுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் சைக்கிள் ஒன்றையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் கொக்குவில் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுகளிலுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த 39, 36, 43 வயதுடையவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஐக்கிய காங்கிரஸ் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தியது



(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சி அம்பாறை மாவட்ட செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

கல்முனை மாநகர சபை தேர்தலுக்காக நேற்று (9) ஐக்கிய காங்கிரஸ் கட்சி சார்பில் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சியினர் கட்டுப்பணம் செலுத்தினர்.

இதன்போது ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஸ்ரீலங்கா தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான குழுவினர் இம்முறை தூய அரசியல் கலாசாரம் ஒன்றினை முன்னெடுத்து மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

திருகோணமலை மாவட்ட கிண்ணியா நகரசபை, கிண்ணியா பிரதேச சபை, புல்மோட்டை பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை, மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச சபை, ஏறாவூர் நகரசபை, காத்தான்குடி நகரசபை, அம்பாறை மாவட்ட கல்முனை மாநகர சபை, காரைதீவு பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, அட்டாளைசேனை பிரதேச சபை, அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து களமிறங்க விருப்பமுடைய நன்னடத்தை கொண்ட இலங்கை அரசியலில் மாற்றத்தை விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பற்றிய தகவல்களை ஐக்கிய காங்கிரஸ் சார்பில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட விரும்புவோர் உங்கள் முழுப் பெயர், தேர்தல் மாவட்டம், பிரதேசம் என்பவற்றை குறிப்பிட்டு தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றை அதன்பின் பகுதியில் உங்களது கையொப்பத்தை இட்டு எமக்கு வட்ஸ்அப் மூலம் அனுப்பிவைக்கவும். தலைவர் 0775449017 கொள்கை பரப்பு செயலாளர் 0771676166 எனும் வாட்சப் இலக்கத்திற்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறும் மேலதிக விடயங்களை 0775449017 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணி ஆவணமின்றி குடியிருப்போருக்கு ஆவணங்களை வழங்க விசாரணை முன்னெடுப்பு

(திருக்கோவில் மேலதிக நிருபர்)

அரச காணிகளில் குடியிருந்து பயிர்செய்யும் மக்களுக்கு ஆவணம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட விசாரணையானது (காணிக்கச்சேரி) திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் நேற்று (09) இடம்பெற்றது.

2008/04 காணி ஆணையாளர் நாயக சுற்று நிருபத்திற்கு அமைவாக, அரச காணிகளில் காணி ஆவணமின்றி குடியிருப்போர் மற்றும் மேட்டு நிலப்பயிர் செய்து வாழ்வாதாரத்தை





மேற்கொள்வோருக்கான காணி ஆவணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் விசாரணையாக இது மேற்கொள்ளப்படுகின்றது.

அந்தவகையில், திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள விநாயகபுரம் 03 பிரிவில் வாழும் மக்களுக்கான விசாரணை நேற்று இடம்பெற்றது.

விசாரணையின் முடிவில் அரச காணியில் உண்மையாக வாழ்வாதாரத்தை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த நபர்களுக்கான காணி ஆவணமானது பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் என்று திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தெரிவித்தார்.

குறித்த காணி தொடர்பான விசாரணையின் போது திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவிப்பிரதேச செயலாளர் க.சதிசேகரன், காணி உத்தியோகத்தர்களாகிய பி.கோவிந்தசாமி, திருமதி.டி.லோஜினி, கிராம சேவகர், திருக்கோவில் பிரதேச செயலக காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காணிக் கச்சேரிகளை நடத்தி மக்களுக்கு காணி ஆவணங்களை வழங்கிய வரிசையில் கிழக்கு மாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களாக திருக்கோவில் பிரதேச செயலகம் முன்னிலை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிரதேச செயலக புதிய கிராம உத்தியோகத்தர் நியமனம்




(சர்ஜூன் லாபீர்)

கல்முனை பிரதேச செயலகத்தின் புதிய நிர்வாக கிராம உத்தியோகத்தராக எம்.எச்.ஜனூபா பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியினால் நேற்று (09) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த இவர் கிராம சேவகர் உத்தியோகத்தில் தரம் 01ஐ சேர்ந்தவர் என்பதுடன், இவர் ஏற்கனவே கல்முனைக்குடி 11, 13, 14 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் கடமையாற்றியுள்ளார்.

# போடியார் புலம்பல்!



**தமிழ் தேசிய கூட்டமைப்பை விரைவாக பதிவு செய்யப்போவதாக ரெலோ பேச்சாளர் பொடியன் சுரேந்திரன் சொல்லியிருக்காரு எலுவா..?**

**சரிடாம்பி பதிஞ்சா தமிழீழம் கிடைச்ச மாதிரித்தான் ஒங்கட ஆக்களுக்கு சந்தோசம் வரும். ஆனா அந்த தமிழரசு கட்சிக்காறர்கள் அத பதியாம ஒரு பொறிய தேர்தல் திணைக்களத்தில ஆப்பு வைச்ச கதய சுரேஷ்பிரமச்சந்திரன் 2010, ல் சொன்னாவரல்லவா..? ஒள்ளுப்பம் அவரிட அட்வஷ்சயும் கேட்டுப்பாத்து சொல்லுடாம்பி!**

# மரண வீட்டில் திருமணத்துக்கு நாள் பார்ப்பதுபோல் தேர்தலை வைப்பதால் மக்களுக்கு என்ன நன்மை?

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன கேள்வி?



(கனகராசா சரவணன்)

நாடு உணவுக்கே பணம் இல்லாது அதலபாதாளத்தில் இருக்கின்ற நிலையில், மரணவீட்டில் திருமணத்துக்கு நாள் பார்க்கின்றதுபோல் மக்கள் பொருளாதாரத்தால் கஷ்டப்படுகின்ற நிலையில் தேர்தலை வைப்பதால் மக்களுக்கு என்ன நன்மை? எனவே, போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலுக்கான செலவை வழங்கவேண்டும். நாடு இருக்கின்ற நிலைவரத்தில் தேர்தல் தீர்வாகாது - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன நேற்று முன்தினம் (8) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இன்று நாட்டிலுள்ள பொருளாதார நிலையைப் பார்க்கும்போது மிகவும் கவலையாகவுள்ளது. நாடு எல்லா பக்கமும் சீரழிந்துள்ளதுடன் அரசாங்கமும் மக்களும் நிர்க்கதியாக இருக்கின்ற இந்த நேரத்தில் தேவையில்லாத ஒரு தேர்தல் நடத்துமாறு அரசாங்கத்துக்கு மிகவும் நெருக்கடி கொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடியால் மக்கள் நாடு கடந்து செல்லும் நிலை அதிகரித்துள்ளது. கடந்த 6 மாதத்திற்கு முன்னர் 100 ரூபாவுக்கு 7 முட்டை விற்பனை செய்தனர். இன்று ஒரு முட்டை வாங்க 80 ரூபா தேவைப்படுகின்றது. அவ்வாறே பால்மா 350 ரூபாவாக இருந்தது. இன்று ஆயிரத்து 250 ரூபா தேவையாகவுள்ளது. இவ்வாறு மக்கள் இன்று அன்றாடம் உணவு உண்பதற்கு கஷ்டப்படுகின்றனர். பட்டினியால் குழந்தைகள் இறந்துவிடுகின்றனர்.

இவ்வாறான நிலையில் இன்று உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் கொடுக்க கூட அரசிடம் பணம் இல்லை என்பதுடன், உள்ளூராட்சி உறுப்பினர்கள் சம்பளம் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய காலகட்டத்துக்கு கொண்டுவரப் போகின்றனரா?

எனவே, தேர்தல் இப்போது பொருத்தமில்லை. எமது நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க ஆலோசனை தெரிவிக்கவேண்டியவர்களே அதைவிடுத்து சண்டைப்பிடிக்க வந்துள்ளனரே தவிர அரசாங்கத்துக்கு பொருளாதாரத்தை எப்படி கட்டியெழுப்பலாம் என எவரும் முன்வரவில்லை.1972ஆம் ஆண்டு தொடக்கம் 93ஆம் ஆண்டுவரை 21 வருடங்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்கவில்லை. அதன்பின்னர் 1994 தேர்தல் நடைபெற்றது. எனவே, இப்போதுள்ள காலசூழலில் பிரதேச சபைகளை பிரதேச செயலகத்திடம் வழங்கி அங்கு வேலை இல்லாமல் இருக்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பொறுப்பு கொடுத்து அவர்கள் மூலம் இந்த உள்ளூராட்சி மன்றத்தை இயக்கமுடியும். நாடு, சுனாமி பேரழிவு மற்றும் கொரோனா தாக்கம், 30 வருட யுத்தம் போன்றவற்றால் மிகப் பேரழிவுகளை சந்தித்துள்ளதுடன், ரஷ்யா - உக்ரைன் போரால் மேலும் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது எங்களுடைய சுயதொழிலில் நாடு நிற்கவேண்டும். உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும.

அதேவேளை, வெளிநாடுகளில் உணவுக்கு கையேந்தாமல் உற்பத்திகளை செய்வதற்கு திட்டங்கள் தீட்டி அபிவிருத்திக்கு தொழிற்சாலைகளை உருவாக்கவேண்டும் அதைவிடுத்து தேர்தலை நடத்து என அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பதாக மக்களுக்குதான் நெருக்கடியை கொடுக்கின்றனர். வெளிநாடுகளில் கடனை வாங்கி தேர்தலை நடத்திவிட்டு கடனை எப்படி கொடுப்பது ?

தேர்தல் நடத்தவேண்டும் என்பது ஜனநாயகம். இருந்தும் தேர்தல் நடத்த வேண்டும் என்பவர்கள் அதற்கான செலவை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும் என்பதுடன் சம்பளத்தை எதிர்பார்க்கக்கூடாது.

நாட்டை நேசிக்கும் எவரும் தேர்தலை நடத்த விரும்பமாட்டார்கள். மக்களுக்கு என்ன செய்யலாம் என்று சிந்திக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் என்ன நடக்கின்றது, மக்களையும் பைத்தியக்காரனாக்கி உலக நாடுகளையும் பைத்தியக்காரர்களாக்கிக்கொண்டு தங்களுடைய இருப்பை தக்கவைக்க ஊடகங்களில் அறிக்கை விட்டுக் கொண்டு இருக்கின்றனரே தவிர, மக்களுக்கு இந்த நேரத்தில் என்ன நம்மை செய்யலாம் என பார்க்கின்றனரா? இல்லை என்பது வேதனையளிக்கின்றது.

நாடு இன்னும் வங்குரோத்து நிலைக்கு போகும் நிலையில் மக்கள் இன்னும் கஷ்டப்படவேண்டுமென விரும்புகின்ற அரசியல்வாதிகளும் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் இருப்பதால்தான் நாட்டில் தலைகீழான நிலை ஏற்பட்டுள்ளது மத்திய வங்கி ஆளுநர் தேர்தல் நடத்தினால் நெல் கொள்வனவுசெய்ய பணம் இல்லாமல் போகும் என்கின்றார். சாப்பாடு இல்லாவிட்டாலும் தேர்தல் வேண்டுமா? என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழு கூடுகிறது

(சாய்ந்தமருது நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழு இன்று செவ்வாய்க்கிழமை (10) கூடவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

SLMC

மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் இன்று பிற்பகல் 4.00 மணியளவில் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக மாவட்ட செயற்குழுவின் செயலாளர் ஏ.சி.சமால்தீன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பாகவும் தேர்தலுக்கான நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் கட்சியின் செயலாளர் நாயகம், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மற்றும் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் உள்ளிட்ட கட்சியின் உயர்மட்ட முக்கியஸ்தர்களும் மக்கள் பிரதிநிதிகளும் பிரதேச அமைப்பாளர்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸின் மாவட்ட செயற்குழுவை புனரமைப்பு செய்யும் பொருட்டு, ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள அங்கத்தவர்களுக்கு இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரியின் சாரணிய இயக்கத்தின் துருப்புக் கூட்டம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) 2023ஆம் ஆண்டிற்கான சாரண இயக்கத்தின் முதலாவது துருப்புக் கூட்டமானது கடந்த வெள்ளிக்கிழமை (06) காலை 8 மணியளவில் பாடசாலை வளாகத்தில் பாடசாலையின் அதிபர் ஆர்.பாஸ்கரின் வழிகாட்டலின்கீழ் குழுச் சாரணத் தலைவர் எம்.சந்திரசுதர்மன் தலைமையில் இந்த ஆண்டுக்கான சாரணிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாரணத் தலைவர்களான என்.கௌசன், என்.சுரேஷ்குமார் என்.திசேந்திரா, எஸ்.சுகுவரன், எஸ்.சரவணதாஸ், குருளைச் சாரணத் தலைவர் என்.பிரதீபன், திருமதி ஜே.விநாயகமூர்த்தி, திருமதி சீ.பஞ்சேந்திரன் சிங்கிதி சாரணத் தலைவர்கள் திருமதி எல்.ஜெயந்திரன், திருமதி எம்.கிறிஸ்தோபர் ஆகியோரும் 140 சாரணிய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# தமிழ் அரசியல் கட்சிகளை ஓரணியில் திரளக் கோரி ஐந்தாவது நாள் போராட்டம் நேற்று திருமலையில்






(மூதூர் நிருபர்)

"ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள்க" எனும் தொனிப்பொருளின்கீழ் திருகோணமலை, முற்றவெளி விளையாட்டு மைதானத்திற்கு முன்னால் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (09) ஐந்தாவது நாளாகவும் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது போராட்டம் இடத்திலுள்ள மரங்களில் தமது கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் காட்சிப்படுத்தியுள்ளதையும் காணமுடிந்தது.

இதில் இளைஞர்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பெண்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர். இதனை வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய இக்கவனயீர்ப்புப் போராட்டம் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இன்று செவ்வாய்க்கிழமை 10ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து மட்டக்களப்பில் பயிற்சி செயலமர்வு

(மட்டக்களப்பு நிருபர்)

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் எமது உரிமைகளை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் பயிற்சி செயலமர்வு ஒன்று மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (06) நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தகவல் உரிமைச் சட்டம் தொடர்பிலும், அந்தச் சட்டத்தை பயன்படுத்துபவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் பொதுமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எவ்வாறு தகவல் அறியும் உரிமைச் சட்டம் பயன்படுகிறது என்பது தொடர்பிலும் மிகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.


தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக எமது உரிமைகளை பாதுகாப்போம் எனும் தலைப்பில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் தகவல் அறியும் சட்டம், இலங்கை பிரஜைகள் அனைவருக்கும் பொதுவானது ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பினருக்கும் சட்டத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாகவே இச்செயலமர்வு இடம்பெற்றது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி செயலமர்வில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சட்டத்தரணி கிஷாலி பிண்டோ ஜெயவர்தன, சட்டத்தரணி ஜகத் லியனஆராச்சி, முஹம்மட் நஜியா, மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி குமார் லோபேஸ், விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் முகமத் பைரூஸ், பத்திரிகை ஸ்தாபனத்தின் தகவல் அறியும் உரிமை சட்ட திட்ட உதவியாளர் ஆர்த்தி ரவிவர்மன் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டு கருத்துகளையும் தகவல்களையும் தெரிவித்திருந்தனர்.






# மட்டு. மாநகர சபை எல்லைக்குட்பட்ட கருவேப்பங்கேணி நாவலர் வீதி புனரமைப்பு





(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கருவேப்பங்கேணி நாவலர் வீதி கொங்கிரீட் இடப்பட்டு, புனரமைக்கும் பணிகள் கடந்த புதன்கிழமை (04) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மழை காலங்களில் இவ்வீதியூடாகப் பயணிப்போர் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பாக மாநகர முதல்வரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து சுமார் 2 மில்லியன் ரூபா செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பணிகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்களான வேலுப்பிள்ளை இராசேந்திரன், துரை. மதன், பூபாலராஜா மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான ச.ராஜ்குமார், விஜயராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

## கலவர பூமியானது பிரேஸில்:

# போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்ட நாடாளுமன்றம் - உயர்நீதிமன்ற கட்டடங்கள் சேதம்




பிரேஸில் முன்னாள் ஜனாதிபதி ஜேர் போல்சனரோவின் ஆதரவாளர்களால் அந்நாட்டு நாடாளுமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற கட்டடங்களை சேதப்படுத்தப்பட்டு அங்குள்ள பொருட்கள் சூரையாடப்பட்டுள்ளது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்திற்கு ஐ.நா மற்றும் அமெரிக்கா, இந்திய உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பிரேஸிலில் அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி போல்சனரோ தோல்வியடைந்தார். முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா வெற்றிபெற்றார். இதையடுத்து, பிரேஸிலின் புதிய ஜனாதிபதியாக லூயிஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால், வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் நேற்று அவரது ஆதரவாளர்கள் நாடாளுமன்றம், உச்ச நீதிமன்ற கட்டடங்களில் நுழைந்து சேதம் விளைவித்துள்ளதுடன் அங்கிருந்த பொருட்களை சூரையாடியுள்ளனர். சம்ப இடத்துக்கு விரைந்த பொலிஸார் போராட்டக்காரர்கள் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகள் வீசியும் அப்புறப்படுத்தினர். இதனால் அப் பகுதியே போர்க்களமாக காட்சியளித்தது. கலவரத்தில் ஈடுபட்டதாக 400இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டதாக அந்நாட்டு நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ள முன்னாள் ஜனாதிபதி போல்சனரோ தான் இந்தச் செயலை தூண்டிவிட்டதாக எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே பரப்புரை செய்கின்றன எனத் தெரிவித்துள்ளார். தன் மீதான குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்றார். 'ஆட்சிக் கவிழ்ப்பு சதி' என்ற குற்றச்சாட்டு ஏற்பதற்கல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கு ஐ.நா மற்றும் அமெரிக்கா, இந்தியா எஉள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

''பிரேஸில் ஜனநாயகத்தின் மீதான தாக்குதலையும், அமைதியான முறையில் அதிகாரத்தை மாற்றுவதையும் நான் கண்டிக்கிறேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்ததோடு, ''பிரேஸில் நாட்டு மக்களின் விருப்பம், ஜனநாயாக அமைப்புகளின் மாண்பு மதிக்கப்பட வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

''பிரேஸிலியாவிலுள்ள அரச நிறுவனங்களுக்கு எதிரான கலவரம் மற்றும் நாசவேலைகள் பற்றிய செய்திகள் குறித்து ஆழ்ந்த கவலை அளிக்கிறது. ஜனநாயக மரபுகளை அனைவரும் மதிக்க வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

## கடும் குளிரால் உத்தரபிரதேசில் ஒரேநாளில் 25பேர் உயிரிழப்பு



உத்தர பிரதேச மாநிலம் கான்பூரில் கடும் குளிர் காரணமாக ஒரே நாளில் 25 பேர் மாரடைப்பு மற்றும் மூளை செயலிழப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர்.

உத்தர பிரதேசம், டில்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருகிறது. இதில் கான்பூரில் 25 பேர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த உறைதலால் மாரடைப்பு ஏற்பட்டும், மூளை செயலிழந்தும் உரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் முதியோர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, கடும் பனிமூட்டம் காரணமாக டில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டீகர் மற்றும் உத்தரப்பிரதேசம் மாநிலங்களுக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் 'ரெட் அலர்ட்' எச்சரிக்கை விடுத்துள்ளது.

## அரசு நிகழ்ச்சிவின்போது சிறுநீர் கழித்த சூடான் ஜனாதிபதி

### வீடியோவை பகிர்ந்ததாக கூறி ஊடகவியலாளர்கள் அறுவர் கைது



அரச நிகழ்வொன்றில் தென்சூடான் ஜனாதிபதி சல்வா கீர் தனது காற்சட்டையிலேயே சிறுநீர் கழித்தது தொடர்பான வீடியோ காட்சிகள் வைரலான நிலையில், வீடியோவை பகிர்ந்ததாக கூறி ஊடகவியலாளர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்நாட்டின் அரசு நிகழ்ச்சியில், தேசிய கீதம் இசைக்கப்படும் போது ஜனாதிபதி சல்வா கீர் அவரது காற்சட்டையில் சிறுநீர் கழித்தது அங்கிருந்த கெமராக்களில் பதிவானது. இதுதொடர்பான வீடியோ காட்சிகள் ஒளிபரப்பப்படவில்லை என்றாலும், அதுகுறித்த வீடியோ காட்சி இணையத்தில் பரவியது. இந்நிலையில், சம்பந்தப்பட்ட அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 6 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சுயநினைவையிழந்த தாய்லாந்து இளவரசி



இதய நோய் காரணமாக மூன்று வாரங்களுக்கு முன்னர் மயக்கி வீழ்ந்த தாய்லாந்து இளவரசி பாஜ்ராகத்தி யாபாவுக்கு இன்னும் சுயநினைவு திரும்பாத நிலையில், மருத்துவமனையில் அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

தாய்லாந்து மன்னருக்கு பின்னர், அவரது இடத்தில் அமர போகும் வாரிசாக கருதப்படுகிறார் பாஜ்ராகத்தி யாபா (44 வயது). கடந்த 15ஆம் திகதி தனது வளர்ப்பு நாய்களை போட்டிக்கு தயார்படுத்தி கொண்டிருந்தபோது திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில், பெங்கொக்கிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். ஆனால் அவருக்கு இன்னும் சுயநினைவுக்கு திரும்பவில்லை என்று அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## உலகக்கிண்ணத்தில் முதல் பாலஸ்தீன பெண் நடுவர்

(ரமணி)



பீபா மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் நடுவராகப் பணியாற்றும் முதல் பாலஸ்தீனிய சர்வதேச கால்பந்து நடுவர் என்ற பெருமையை ஹெபா சாடியா பெற்றுள்ளார். இந்த சாதனையைப் படைத்த முதல் அரபு பெண்மணி என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

2022 ஆம் ஆண்டு வியட்நாமில் நடந்த ஆசியக் கிண்ண கூட்டமைப்பு நடத்தும் போட்டிகளின் கோப்பை போட்டிகளின் நடுவராக ஹெபா சாடியா தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த மகளிர் ஆசியக் கிண்ணப் போட்டிகளுக்கு நடுவராக இருந்தார்.

சாடியா பாலஸ்தீனிய யர்மூக் அகதிகள் முகாமில் நடுவராக பணியாற்றத் தொடங்கினார், அங்கு அவர் பாலஸ்தீனிய பெற்றோருக்குப் பிறந்தார்.பல்கலைக்கழகத்தில், உடற்கல்வியில் டமாஸ்கஸில் படித்தபோது விளையாட்டில் நிபுணத்துவம் பெற்றார்.

கடந்த ஆண்டு பாலஸ்தீன டிவி ஸ்போர்ட்ஸ் மற்றும் யூத் சேனலுக்கு அளித்த பேட்டியில், நடுவர்கள் குழுவொன்றைப் பயிற்சி செய்வதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன், அவர்களில் பெண்கள் இல்லை என்பதை கவனித்தேன்.

நான் அதைப் பற்றி அவர்களிடம் கேட்டபோது, அவர்களுடன் நான் சேர பரிந்துரைத்தார்கள், அதனால் நான் நடுவரானேன் என்றார்.

ஜூலை 20 முதல் ஆகஸ்ட் 20 வரை அவுஸ்திரேலியா , நியூசிலாந்து ஆகிய நாடுகலில் நடைபெற உள்ள 2023 பீபாமகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் சாடியா பணியாற்ற உள்ளார்.

## இலங்கை - இந்திய அணிகள் மோதும் ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்



### 26 ஆண்டு தாகத்தை தீர்க்குமா இலங்கை அணி?

(ஏ. அகீல் சிஹாப்)

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்கும், ஹார்டிக் பாண்டியா தலைமையிலான இந்திய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி இன்று இலங்கை நேரப்படி பகல் 1.00 மணிக்கு மும்பை வான்கடே மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இந்திய அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில் ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

**நேருக்கு நேர்**

கடந்த 1979ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் இலங்கை - இந்திய அணிகள் 162 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் மோதியுள்ள நிலையில் 93 போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றிருக்கிறது. இலங்கை அணி வெறும் 57 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருக்கின்ற நிலையில், ஒரு போட்டி சமநிலையிலும், 11 போட்டிகள் வெற்றி தோல்வியின்றியும் முடிவடைந்துள்ளன.

இறுதி ஐந்து போட்டிகள்

இந்திய அணி இறுதியாக கடந்த 2021 ஜூலையில்இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடியது. அந்த தொடரை இந்திய அணி 2-1 என கைப்பற்றியது. இறுதியாக நடைபெற்ற 5 போட்டிகளில் இந்திய அணி 4 போட்டிகளிலும், இலங்கை 1 போட்டியிலும் வெற்றிபெற்றுள்ளன.

**அணிக்கு திரும்பிய முக்கிய வீரர்கள்**

இந்திய அணியின் தலைவர் ரோஹிட் சர்மா, நட்சத்திர வீரர் விராட் கோஹ்லி, கே.எல் ராகுல், ஜஸ்பிரிட் பும்ரா உள்ளிட்ட சில முக்கிய வீரர்களுக்கு டி20 தொடரில் ஓய்வு வழங்கப்பட்ட நிலையில் குறித்த வீரர்கள் ஒருநாள் தொடரில் அணிக்கு திரும்பியுள்ளனர்.

**பதிலடி கொடுக்குமா இலங்கை ?**

முன்னதாக நடைபெற்ற இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இழந்த இலங்கை அணி ஒருநாள் சர்வதேச தொடரில் இந்திய அணிக்கு பதிலடி கொடுத்து தொடரை கைப்பற்றுமா என்பதை பொருத்திருந்து பார்க்கலாம்.

**இலங்கையின் 26 வருட எதிர்பார்ப்பு**

இலங்கை அணி கடந்த 1997ஆம் ஆண்டு நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியதன் பின்னர் 24 வருடங்களாக இந்திய அணியுடன் ஒருநாள் சர்வதேச தொடரை கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## சினேகபூர்வ உதைபந்தாட்டத்தில் சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி



(நிந்தவூர் நிருபர்)

அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகத்திற்கும் சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியில் 2 - 0 என்ற கோல் அடிப்படையில் சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சம்மாந்துறை ஸ்பாடன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் நசீத் மற்றும் ஐனுஸ்கான் ஆகியோர் தலா ஒரு கோலை புகுத்தியிருந்தனர்

## நுவரெலியா மாவட்ட பூப்பந்து சங்கத்தின் தலைவர் கிண்ணத்திற்கான போட்டிகள் நிறைவு

(நானுஓயா நிருபர்)



நுவரெலியா மாவட்ட பூப்பந்து சங்கத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட பூப்பந்து சங்கத்தின் தலைவர் கிண்ணத்திற்கான 2022ஆம் ஆண்டிற்கான சம்பியன்ஷிப் பூப்பந்தாட்ட போட்டிகள் கடந்த மூன்று நாட்களாக நுவரெலியா மாநகரசபை விளையாட்டு உள்ளரங்கில் பெருந்திரளான வீரர்களின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு பங்களித்த வீரர்கள், அதிகாரிகள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் நுவரெலியா மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் மத்திய மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் தற்போதய உறுப்பினருமான மஹிந்த தொடம்பேகமகே நன்றி தெரிவித்தார்.

பாடசாலை மாணவ மாணவிகளுக்கான 10, 13, 15 மற்றும் 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் நடைபெற்றன. அதேபோல திறந்த போட்டியும் வயது எல்லைப்படி நடைபெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை நுவரெலியா மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் மத்திய மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் தற்போதய உறுப்பினருமான மஹிந்த தொடம்பேகமகே நுவரெலியா மாவட்ட பெட்மிடன் சங்கத்தின் பொருளாளர் சாமர மற்றும் நுவரெலியா இலங்கை வங்கி முகாமையாளர் ராமன் ஆகியோர் பரிசுகளையும் வெற்றி கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7